எழிலுறு காட்சிகளுடன் அழகுற படம் பிடித்திட..... அஜந்தா கலைப் பூங்கா 65-சங்கிலியன் வீதி- நல்லூர்

பக்கங்கள்: ஆறு

Registered as a Newspaper

உதயன்

விலை ரூபா 5-00

எழிலுறு காட்சிகளுடன் அழகுற படம்பிடித்திட... அஜந்தா கலைப் பூங்கா 65-சங்கிலியன் வீதி- நல்லூர்

சுடர் 10 திருவள்ளுவர் ஆண்டு 2025 மார்கழி 14 வியாழக்கிழமை (29 — 12 — 1994) UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 33

மூதூர் இறங்குதுறையில் உள்ள இராணுவ காவலரண், நிர்மூலம்!

நீதிமன்றில் ஆஜராகுமாறு ஜே.ஆருக்கு அழைப்பாணை!

கொழும்பு, டிச. 29

எதிரி சார்பாக சாட்சி அளிப்பதற்காக ஜனவரி 4 ஆம் திகதி நீதிமன்றில் ஆஜராகுமாறு தெரிவித்து முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவுக்கு அழைப்பாணை அனுப்புப்படி கொழும்பு மேலதிக நீதிவான் சம்பா புத்திபால நேற்றுக் கட்டளையிட்டுள்ளார்.

தற்பொழுது வேலை இடைநிறுத்தப்பட்டுள்ள பொலீஸ் இன்ஸ்பெக்டரான லக்ஷ்மன் ஜயம்பதி ராஜபக்ஸவுக்கு எதிராகத் தாக்கல் செய்யப்பட்டுள்ள வழக்கில் அவர் சார்பாக சாட்சியம் அளிப்பதற்காகவே முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனா அழைக்கப்பட்டுள்ளார்.

திரு. ஜெயவர்த்தனா ஜனாதிபதி பதவியில் இருந்து நீங்கிய பின்னர் நீதிமன்றத்துக்கு அழைக்கப்பட்டிருப்பது இதுவே முதல் தடவையாகும். (ஒ-ச-9)

தாதியர் வேலை நிறுத்தம் அரசுக்கு காலக்கெடு!

கொழும்பு, டிச. 29

தமது கோரிக்கைகளை முன்வைத்து சட்டப்படி வேலை செய்யும் இயக்கத்தை நடத்திவரும் அரசாங்க ஆஸ்பத்திரியில் வேலை செய்யும் தாதிமார்கள் —

அரசாங்கத்துக்கு கால அவகாசம் கொடுக்கும் வகையில் வேலைநிறுத்தத்தில் குதிக்கும் முடிவை அடுத்த மாதம் 3 ஆம் திகதிவரை ஒத்திவைத்துள்ளனர்.

இந்தக்கால எல்லைக்குள் தமது கோரிக்கைகளுக்கு நியாயமான தீர்வு கிடைக்காவிட்டால் அடுத்தமாதம் 3 ஆம் திகதி முதல் வேலை நிறுத்தத்தில் இறங்குவது என்று அரசாங்க சேவை ஐக்கிய தாதிமார்கள் சங்கம் தீர்மானித்துள்ளது.

எமது கோரிக்கை தொடர்பாக அரசு தவறான கருத்துக்களை நாட்டு மக்களுக்கு தெரிவித்து வருகிறது என்று அந்தச்சங்கம் அரசை குற்றம் சாட்டியுள்ளது. (ஒ-3)

பன்முகப்படுத்தப்பட்ட நிதி குறைவாகவே கிடைக்கும்

யாழ்ப்பாணம், டிச. 29

பன்முகப்படுத்தப்பட்ட வரவு-செலவுத் திட்ட நிதி ஒதுக்கீடு இம்முறை குடாநாட்டில் இராணுவ ஆக்கிரமிப்பில் இல்லாத பகுதிகளுக்கு மிகக் குறைவாகவே கிடைக்கும் என்று அறிய வருகிறது.

ஒவ்வொரு நாடாளுமன்ற உறுப்பினருக்கும் பன்முகப் படுத்தப்பட்ட நிதியாக வருடாந்தம் 25 லட்சம் ரூபாய் ஒதுக்கப்படுவதுண்டு.

அந்த நிதியை அவர் தமது மாவட்டத்தில் உள்ள பிரதேசங்களின் அபிவிருத்தி வேலைகளுக்குப் பயன்படுத்த அதிகாரமுண்டு.

இம்முறை யாழ். மாவட்ட எம். பிக்களாகத் தெரிவு செய்யப்பட்டவர்கள் தமது நிதியில் மிகப்பெரும்பகுதியை இராணுவ ஆதிக்கத்தில் உள்ள தீவுப்பகுதி, மற்றும் வலிகாமம் வடக்கின் அபிவிருத்தி வேலைகளுக்கே ஒதுக்க முடிவு செய்துள்ளனர் என்று தெரிவந்துள்ளது.

அதன் காரணமாக இராணுவ ஆதிக்கத்தில் இல்லாத பகுதிகளுக்கு மிகக் குறைந்தளவு பணமே கிடைக்கும்

[6 ஆம் பக்கம் பார்க்க]

ம.எண்ணெயுடன் மாஹோ நேற்று வந்து சேர்ந்தது

யாழ். மாவட்டத்துக்கான 8 ஆயிரம் பரல் மண்எண்ணெயுடன் 'மாஹோ' கப்பல் நேற்று காங்கேசன் துறைக்கு வந்து சேர்ந்துள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் தற்சமயம் இரண்டு கப்பல்களில் இருந்து பொருள்கள் இறக்கப்பட்டு வருவதால் 'மாஹோ' கப்பலில் இருந்து பொருள்கள் இறக்கும் வேலைகள் ஓரிரு தினங்களில் ஆரம்பிக்கும் என்று தெரிவிக்கப்பட்டது.

பருத்தித்துறையில் பொருள்களை இறக்கி முடித்துவிட்டு திருகோணமலைக்கு நேற்று 'ஹபரண' கப்பல் திரும்பிச் சென்றதாகவும் —

ஒரு தொகுதி மாவை ஏற்றிக்கொண்டு அக்கப்பல் பருத்தித்துறைக்கு மீண்டும் வந்து சேரும் எனவும் — தெரிவிக்கப்பட்டது. (ஒ-3)

இளநிலைத் தேர்வு

யாழ். மாவட்டத்தில் சிறப்பாகத் தேறியவர்கள்

யாழ்ப்பாணம், டிச. 29

தமிழீழக் கல்வி மேம்பாட்டுப் பேரவையினரால் யாழ். மாவட்டத்தில் 8 ஆம் ஆண்டு மாணவர்களுக்கென நடத்தப்பட்ட தமிழீழ இளநிலைத் தேர்வு [ஆண்டிறுதித்தேர்வு] பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

மாவட்ட மட்டத்தில் முதல் 10 இடங்களைப் பெற்றவர்களது பெயர் விவரம் மற்றும் சிறப்பாடங்களிலும் மிகுதிறன் தேர்ச்சி [8 D] பெற்ற பாடசாலைகள் மாணவர்கள் விவரம் வருமாறு:-

யாழ். இந்து

01. விநாயகமூர்த்தி துஷ்யந்தன் [723 புள்ளி]

ஹாட்லி

02. கணபதிப்பிள்ளை குமணன் [714 புள்ளி]

உடுவில் மகளிர்

03. றோஜித்தா விசுப்பிரமணியம் [697 புள்ளி]

மகாஜனா

03. அவித்தா கனகரட்ணம் [697 புள்ளி]

வேம்படி மகளிர்

05. பத்மப்பிரியா நாகேந்திரன் [695 புள்ளி]

மெதடிஸ்த உயர்தர பெண்கள் பா.

05 வைதேகி வேலாயுதம்

[6 ஆம் பக்கம் பார்க்க]

புலிகள் ஊடுருவித் தாக்குதல்

யாழ்ப்பாணம், டிசம்பர் 29

திருகோணமலை மூதூர் இறங்குதுறையில் விடுதலைப் புலிகள் நேற்று ஊடுருவி நடத்திய தாக்குதலில் இராணுவ காவலரண் முற்றாக நிர்மூலமாக்கப்பட்டது.

இராணுவத்தினரின் பலத்த பாதுகாப்பு உள்ள அந்தப் பகுதியில் விடுதலைப் புலிகள் ஊடுருவித் தாக்குதலை நடத்தியுள்ளனர்.

இராணுவத்தினருக்கு பலத்த உயிர்ச்சேதம் ஏற்பட்டுள்ளது என்றும், சேத விவரங்கள் கிடைக்கவில்லை என்றும் தெரிவிக்கப்பட்டது.

இதேவேளை மூதூரில் இடம்பெற்ற தாக்குதல் ஒன்றில் இராணுவத்தினர் இருவர் கொல்லப்பட்டனர் என்று ஏஜென்ஸிச் செய்திகள் தெரிவித்தன. (ஒ-3)

பாதுகாப்பு நிலைகளுக்குள் நுழைய விடுதலைப் புலிகள் புதிய யுக்தி!

பொலீஸ் தலைமையகம் எச்சரிக்கை

கொழும்பு, டிச. 29

கடந்த 4 ஆண்டு காலத்தில் தமது தாக்குதல்களில் கொல்லப்பட்ட அல்லது கைது செய்யப்பட்ட பாதுகாப்பு படை அதிகாரிகள் மற்றும் சிப்பாய்களின் உத்தியோகபூர்வ அடையாள அட்டைகளில் மாற்றம் செய்து, அவற்றின் மூலம் தயாரிக்கப்பட்ட கள்ள அடையாள அட்டைகளைப் பயன்படுத்தி, கேந்திர நிலையங்களுக்குள் விடுதலைப் புலிகள் நுழையலாம்.

— இவ்வாறு பொலீஸ் தலைமையகம் நாட்டிலுள்ள சகல கேந்திர முக்கியத்துவம் வாய்ந்த நிலையங்களின் பாதுகாப்புப் பிரிவுகளுக்கும் எச்சரிக்கைச் செய்தி ஒன்றை அவசரமாக அனுப்பி வைத்திருக்கிறது.

பாதுகாப்புத்துறையுடன் சம்பந்தப்பட்ட கேந்திர நிலையங்களுக்கும் அரசின் முக்கிய

(6 ஆம் பக்கம் பார்க்க)

யுத்த நிறுத்தம் வராததால்

கேந்திர நிலைகளை புலிகள் தாக்கலாம்!

கொழும்பு, டிச. 28

எதிர்பார்க்கப்பட்ட யுத்த நிறுத்தம் வராததால் இராணுவ மற்றும் கேந்திர நிலைகள் மீது விடுதலைப் புலிகள் தாக்குதல் நடத்தலாம் என்ற அச்சம் ஏற்பட்டிருப்பதாக கொழும்பு ஆங்கில வார இதழ் ஒன்று தெரிவித்திருக்கின்றது.

டிசம்பர் மாத ஆரம்பத்தில் இருந்து படையினரின் முன்னணி நிலைகள் மீது விடுதலைப் புலிகள் ஊடுருவுவது அதிகரித்து வருவதற்கு ஆதாரங்கள் கிடைத்திருக்கின்றன.

டிசம்பர் ஆறாம் திகதி ஆனையிறவு முகாமின் முன்னணி நிலைகளுக்குள் புலிகள் ஊடுருவியது கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

மணலாறுப் பகுதியில் — லெப்டினன்ட்கேணல அமுதன் (அல்லது தம்பி அல்லது மல்லி) விசேட அதிரடிப் படையினரால் கொல்லப்பட்ட பின்னர், கொக்குத்தொடுவாய் இராணுவ முகாமிற்கு வெளியே உள்ள முன்னணி பாதுகாப்பு நிலைகளை அறிந்து வருவதற்

[6 ஆம் பக்கம் பார்க்க]

முச்சந்திமுரசு

உது சாண் ஏற முழம் சறுக்கிற கதை மாதிரி எல்லோ கிடக்குது....!

ஐ. தே. க. கட்சியின் காபந்து அரசில் ரூ. 540 கோடி கேள்விப்பத்திர ஊழல்

3 மணித்தியாலத்தில் 475 விடயங்களுக்கு அங்கீகாரம்

கொழும்பு, டிச. 29

தற்போதைய எதிர்க்கட்சித் தலைவரும், ஐ. தே. க. தலைவருமான ரணில் விக்கிரமசிங்க பிரதமராகவிருந்த போது இடம்பெற்றதாகக் கூறப்படும் ஊழல்கள் பற்றிய செய்திகள் தற்போது கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவரத் தொடங்கியுள்ளன.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர், காபந்து அரசின் ஆட்சிக் காலத்தில் — பிரதமர் ரணில் தலைமையிலான அமைச்சரவையின் கேள்விப் பத்திரச்சபை மளமளவென்று பெரும் எண்ணிக்கையான கேள்விப் பத்திரங்கள் மற்றும் காணி விநியோகம், பதவி உயர்வுகள் — நியமனங்கள் போன்றவற்றுக்கு அங்கீகாரம் வழங்கியதாகவும்—

அவற்றில் பெரும் ஊழல் இடம்பெற்றிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகின்றது

03-08-94 அன்று 95 நிமிடங்களே நடைபெற்ற கூட்டத்தில் 356 விவகாரங்களும்

10-08-94 அன்று 85 நிமிடங்களே நடைபெற்ற கூட்டத்தில் 119 விவகாரங்களுக்குமாக மொத்தம் 475 விட

(6 ஆம் பக்கம் பார்க்க)

சக்தி மிக்க எதிரணிக் கூட்டணி காங்கிரஸுக்கு எதிராக உதயமாகும்

அ.தி.மு.கவையும் சேர்க்க முயற்சி

சென்னை, டிச. 29

இந்தியாவில் ஆளும் இந்திரா காங்கிரஸுக்கு எதிராக —

தேசிய முன்னணி [இது ... ஆண்டு ... சாரிக் கட்சிகள் ... தி.மு.க. ... ணைந்து பலமான கூட்டு எதிரணி ஒன்றை அமைக்க முயன்று வருவதாகக் கூறப்படுகின்றது

இந்த பலமிக்க எதிரணி ... ஆண்டு ... தலில் நரசிம்மராவ் அரசுக்கு பெரும் சவாலாக அமைய ... லாம் எனக் கருதப்படுகிறது.

எதிர்கட்சி கூட்டணியை விரைவில் உருவாக்குவதற்கு ஆந்திர மாநில முதலமைச்சர் திரு. என்.டி. ராமராவ் தீவிர முயற்சிகளை மேற்கொண்டுள்

வி.பி.சிங் தலைமையிலான ஜனதா தளம், ராமராவ்

(6ஆம் பக்கம் பார்க்க)

அரசு – புலிகள் பேச்சு மீண்டும் ஒத்திவைப்பு?

"த ஐலண்ட்" நேற்றுத் தகவல்

கொழும்பு, டிச. 29

அரசு – விடுதலைப் புலிகள் இடையே இன்று அல்லது நாளை ஆரம்பமாகும் என எதிர்பார்க்கப்பட்ட இரண்டாம் கட்டப் பேச்சுக்கள் காலவரையறையின்றி ஒத்திப் போடப்பட்டிருப்பதாக "த ஐலண்ட்" பத்திரிகை நேற்று செய்தி வெளியிட்டிருக்கிறது.

அடுத்த கட்டப் பேச்சுக்களில் ஆராயப்பட வேண்டிய விடயங்கள் குறித்து இருதரப்பு இணக்கநிலை ஏற்படாததாலேயே பேச்சுகள் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டதாக அப்பத்திரிகைச் செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

பொ.ஐ.முன்னணி அரசின் அமைச்சரவையில் இடம்பெற்றுள்ள எஸ். தொண்டமான் நேற்று முன்தினம் சென்னையில் செய்தியாளர்களுக்குப் பேட்டியளித்தபோது இருதரப்புப் பேச்சுக்கள் இன்று [வியாழக்கிழமை] இடம்பெறும் என முன்னர் குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே.

(உ-க-3)

வெளிநாட்டு முதலீட்டாளர் இங்கு முதலிட பின்னடிப்பு

கொழும்பு, டிச. 29

கொழும்பில் பல நிறுவனங்களில் இடம்பெற்று வரும் வேலை நிறுத்தங்கள் வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் புதிய அரசு மீது பெரும் நம்பிக்கையீனத்தை கொண்டு வந்துள்ளதாக செய்தி ஏஜென்ஸிகள் தெரிவிக்கின்றன.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க வெளிநாட்டு முதலீட்டாளர்கள் மத்தியில் உருவாகியுள்ள அதிருப்தியைச் சமாளிக்க பல வழிகளிலும் முயற்சிகள் எடுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் முதலீடு செய்ய ஆயத்தமான பல வெளிநாட்டு முதலீட்டாளர்கள் தற்சமயம் பின்னடிப்பதாகவும்—

ஜப்பான் – இலங்கை கூட்டு முயற்சியான மட்பாண்டத் தொழிற்சாலையில் தொடரும் வேலை நிறுத்தம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு பெரும் நம்பிக்கையீனத்தை ஏற்படுத்தியுள்ளதாகவும் — தெரிவிக்கப்படுகிறது.

ஆசிரிய இடமாற்றம் குறித்து அமைச்சருக்கு சிபார்சு

கொழும்பு, டிச. 29

★ ஆசிரியர் ஒருவர் குறிப்பிட்ட ஒரு பாடசாலையில் பணிபுரியும் ஆகக் குறைந்த காலமும், ஆகக்கூடிய காலமும் தீர்மானிக்கப்பட வேண்டும்.

★ மாணவர்களின் நலனைக் கருத்தில் கொண்டு மட்டுமே ஆசிரியர் இடமாற்றங்கள் செய்யப்பட வேண்டும்.

★ ஆசிரியர் இடமாற்றங்களில் அரசியல் தலையீடு முற்றாகத் தவிர்க்கப்பட வேண்டும்.

புதிய கல்வி அமைச்சர் றிச்சார்ட் பத்திரன ஆசிரியர் இடமாற்றம் குறித்து ஆராய்வதற்கென நியமித்த விசேட குழு இந்தச் சிபார்சுகளைச் செய்துள்ளது.

கல்வி அமைச்சின் மேலதிக செயலாளர்கள் இருவர், மாகாண சபைகளின் கல்வி அமைச்சு செயலாளர்கள் மற்றும் தொழிற்சங்கங்கள் பிரதிநிதிகள் இக்குழுவில் அங்கம் வகித்தனர்.

ஆசிரியர்கள் பாடசாலைகளின் தேவைக்கேற்ப சமமாக இடமாற்றம் செய்யப்பட வேண்டும் என்றும் —

ஆசிரியர்களின் தொழில் திறனை அதிகரிக்கவும், அவர்

[6 ஆம் பக்கம் பார்க்க]

தமிழாராய்ச்சி மாநாடு:

பேராளர் என்ற பெயரில் புலிகள் ஊடுருவலாமாம்!

கொழும்பு, டிச. 29

உலகத் தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்ளும் பேராளர்கள் என்ற சாட்டில் விடுதலைப் புலிகள் தமிழகத்துக்குள் நுழையலாம் என அரசியல்வாதிகள் கருதுவதே தமிழகத்தில் இலங்கைத் தமிழர் தொடர்பாக கெடுபிடிகள் தீவிரமாகக் காரணமாகும்.

கொழும்புத் தமிழ்ப் பத்திரிகை ஒன்று இவ்வாறு நேற்று செய்தி வெளியிட்டது.

இதேவேளை —

தமிழகத்தில் உள்ள சகல சுதந்தமிழர் அகதி முகாம்களில் இருந்தும் அகதிகள் கண்டபடி வெளியே நடமாட

[6 ஆம் பக்கம் பார்க்க]

இலங்கைப் பயணிகள் மீது திருச்சியில் ஏக கெடுபிடி!

கொழும்பு, டிச 29

ஜனவரி முதலாம் திகதி தஞ்சாவூரில் ஆரம்பமாகவிருக்கும் 5 ஆவது உலக தமிழாராய்ச்சி மாநாட்டிற்கு இலங்கையில் இருந்து வருவோரும் மற்றும் இலங்கைப் பயணிகளும் திருச்சி விமான நிலையத்தில் கடும் சோதனைக் குள்ளாக்கப்படுகின்றனர்.

சோதனைக் கெடுபிடிகளும் அதிகரித்துள்ளன.

இது குறித்து கேட்டபோது உலக தமிழ் மாநாடு முடியும் வரை இலங்கைப் பயணிகளை அனுமதிப்பதில் மிக அவதானமாக இருக்கும்படி மேலிடம் உத்தரவிட்டுள்ளது என்று விமான நிலைய அதிகாரிகள் தெரிவித்தனர். [உ-3]

மாகாணசபைக் குழுவுக்கும் மாநாட்டில் இடமில்லை!

யாழ்ப்பாணம், டிச. 29

உலக தமிழாராய்ச்சி மாநாட்டில் கலந்து கொள்வதற்காக வடக்கு – கிழக்கு மாகாணசபை பிரதம செயலாளர், கலாசார உதவிப் பணிப்பாளர் ஆகியோர் உள்ளடக்கிய — வடக்கு - கிழக்கின் 6 எழுத்தாளர்கள், கலைஞர்கள் அனுப்பிய விண்ணப்பங்களும் நிராகரிக்கப்பட்டுள்ளன.

மாநாட்டில் கலந்து கொள்ள மாகாணசபையால் அனுப்பி வைக்கப்பட்ட 102 டொலர் அனுமதி கட்டணமும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளது.

இம்மாநாட்டுக்கென குழுவினரால் அனுப்பி வைக்கப்பட்ட ஆக்கங்களும் திருப்பி அனுப்பப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (உ-3)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குழுக்களின் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்

தினேஷ் கூறுகிறார்

"அனைத்து ஆயுதக் குழுக்களினதும் ஆயுதங்கள் களையப்பட வேண்டும்"

இப்படிக் கோருகின்றார் மக்கள் ஐக்கிய முன்னணித் தலைவர் தினேஷ் குணவர்த்தன.

தற்போது அரசுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடக்கும் பேச்சுக்கள் தொடர்பாக கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு கோரியுள்ளார்.

தற்போது நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுக்கள் குறித்து அரசு எதுவும் தெரிவிக்கவில்லை.

பேச்சுக்கள் குறித்து அறிவிக்கப்படும் என்று ஜனாதிபதி அறிவித்திருந்த போதும், அரசுக்கும், விடுதலைப் புலிகளுக்கும் இடையில் நடைபெறும் கருத்துப் பரிவர்த்தனை குறித்து எவருக்கும் எதுவுமே தெரியாது.

பேச்சுக்கள் வெற்றி பெறும் என்று ஜனாதிபதி மக்களுக்கு கூறியுள்ளார்

பேச்சுவார்த்தையின் முன்னேற்றத்தை ஆகக் குறைந்தது முன்னணி அரசியல் கட்சித் தலைவர்களுக்காவது அரசு தெரியப்படுத்த வேண்டும்.

அனைவருக்கும் சம உரிமைகளை வழங்கும் ஐக்கிய இலங்கையையே எமது முன்னணி ஆதரிக்கும்.

இப்படி அவர் மேலும் கூறினார். (இ-3)

கொலைச் சந்தேக நபர் படையணி ஒன்றின் தளபதி

யாழ்ப்பாணம், டிச. 29

எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர்கள் கொலை தொடர்பாக சந்தேகிக்கப்பட்ட பிரிகேடியர் தரத்திலான இராணுவ அதிகாரி ஒருவர் படையணி ஒன்றின் தளபதியாக தற்போது பணியாற்றுகிறார்.

பிரிகேடியர் பரிலியனகே என்ற இந்த அதிகாரி எம்பிலிப்பிட்டிய பாடசாலை மாணவர் கொலையில் முக்கிய நபராக சந்தேகிக்கப்பட்டிருந்தார்.

பிணையில் விடப்பட்ட இவர் புஸ்ஸே பகுதியில் 13 ஆவது படையணியின் தளபதியாக பணியாற்றி வருகிறார். (இ-3)

இடம் பெயர்ந்தோருக்கும் சீனி வழங்க பணிப்பு

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ். செயலகத்தினால் பண்டிகை காலங்களை முன்னிட்டு ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்ட 2 கிலோ சீனியை இடம்யெர்ந்த மக்களுக்கு வழங்குவதற்கு சில பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்கள் மறுப்பதாக முறைப்பாடு தெரிவிக்கப்படுகிறது.

இடம்பெயர்ந்த குடும்பங்கள் உட்பட அனைத்துக் குடும்பங்களுக்கும் இம்முறை மா, சீனி வழங்கப்பட வேண்டுமென்று செயலகம் அறிவித்திருந்த போதும் சில சங்கங்கள் இவ்வாறு சீனியை வழங்குவதற்கு மறுப்பு தெரிவித்திருப்பது குறித்து இடம் பெயர்ந்த மக்கள் யாழ். செயலக உயரதிகாரிகளிடம் முறையிட்டுள்ளனர்.

இதனை அடுத்து சீனியை இடம்பெயர்ந்தவர்களுக்கும் விநியோகிக்குமாறு பல நோக்கு கூட்டுறவுச் சங்கங்களுக்கு யாழ். செயலகம் மீண்டும் பணிப்புரை விடுத்துள்ளதாகத் தெரிகிறது.

காமதேனு பண்ணையில் நடைபெற்ற

மரக்கன்று விநியோகம் கோண்டாவிலுக்கு மாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 29

இதுவரை காலமும் சுன்னாகத்தில் உள்ள காமதேனு பண்ணையில் நடைபெற்று வந்த மரக்கன்றுகள் விநியோகம் இடமாற்றப்பட்டு தற்போது இருபாலை வீதி கோண்டாவிலில் அமைந்துள்ள தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவன யாழ். மாவட்ட செயலகத்திற்கு அருகாமையில் நடைபெறுகிறது.

வேம்பு, மலைவேம்பு, இலுப்பை, வாகை, புளி, தேக்கு. வெல்வேல், கருவேல் போன்ற பல இன மரக்கன்றுகள் விநியோகத்துக்கு உள்ளன.

நாற்று மேடையில் உற்பத்தி செய்யப்பட்டு வெற்று பரல்களில் 04 அடி தொடக்கம் 05 அடி உயரமாக வளர்க்கப்பட்ட கன்றுகளும், பால் மா உறைகளில் வளர்க்கப்பட்ட கன்றுகளும் விநியோகிக்கப்பட்டு வருவதாக தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் சூழல் பாதுகாப்பு பகுதியினர் தெரிவிக்கின்றனர்.

சூழலின் பாதுகாப்பை பேணும் பொருட்டும்—

விறகுத் தேவையை ஓரளவு பூர்த்தி செய்யும் வகையிலும்— தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் காட்டு மர நாற்றுமேடை திட்டமொன்றை செயற்படுத்தி மரக்கன்றுகளை விநியோகித்து வருவது தெரிந்ததே (இ)

நேர்மையான மாணவி

வீதியில் கண்டெடுத்த 29 ஆயிரம் ரூபா பெறுமதியான தங்கச் சங்கிலியை மீசாலை வீரசிங்கம் மகாவித்தியாலய மாணவி செல்வி தேவராசா மோகனா வித்தியாலய அதிபர் அ. பொ செல்லையாவிடம் ஒப்படைத்தார்.

இச்சங்கிலி உரியவரிடம் அதிபரால் ஒப்படைக்கப்பட்டபோது இம் மாணவியின் நேர்மையைப் பாராட்டி கைக் கடிகாரம் ஒன்று அன்பளிப்பாக வழங்கப்பட்டது (க-117)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண அரசுக்குக் கைகொடுக்கிறோம்

மாநாட்டில் சமசமாஜக் கட்சித் தலைவர் உரை

கொழும்பு, டிச. 29

"இந்த நாட்டில் புரையோடிப் போயிருக்கும் இனப்பிரச்சினைக்குத் தீர்வு கண்டு யுத்தத்துக்கு முடிவு கட்டவும், ஜனநாயகத்தைப் பாதுகாத்து நேர்மை, நீதி, நியாயங்களை நிலைநிறுத்தி முற்போக்குச் சக்திகளை ஒன்று திரட்டவுமே இலங்கை சமசமாஜக் கட்சியும், இலங்கைக் கம்யூனிஸ்ட் கட்சியும் இன்றைய அரசாங்கத்துடன் இணைந்துள்ளன"

இலங்கை சமசமாஜக் கட்சியின் தலைவரும் விஞ்ஞான தொழில்நுட்ப மனிதவள அமைச்சருமான பொன்னாட் சொய்சா இவ்வாறு கூறினார்.

கடந்த 21 ஆம் திகதி கொழும்பு பொதுநூலகக் கேட்போர் கூடத்தில் நடைபெற்ற சமசமாஜக் கட்சியின் 59ஆவது மாநாட்டில் உரை நிகழத்தியபோது அவர் மேலும் கூறியதாவது:

இலங்கை சமசமாஜக் கட்சியும் கம்யூனிஸ்ட் கட்சியும் விரைவில் ஒன்றாக இணைந்து கைகோர்க்கப் போகின்றன. எமது அரசியல் சித்தாந்தங்கள் கம்யூனிஸ்ட் கட்சியில் பிரதிபலிக்கின்றன. இதனால் எமது இரு கட்சிகளும் ஒன்றாக இணைவதில் எவ்வித பிரச்சினைகளுத் இல்லை. ஏகாதிபத்தியத்துக்கு எதிராகவே அன்று முதல் இன்றுவரை இவ்விரு கட்சிகளும் போராடி வந்துள்ளன என்றார். (க)

1995 வரவு செலவில் வரவு 42 ஆயிரம் ரூபா மேலதிகம்

சாவகச்சேரி நகரசபையின் 1995 ஆம் ஆண்டுக்கான உத்தேச வரவு செலவுத் திட்டத்தில் 42 ஆயிரத்து 300 ரூபா மேலதிக வருமானமாக உள்ளது.

உத்தேச வருமானமாக ஒரு கோடியே 8 லட்சத்து 10 ஆயிரத்து 700 ரூபாவும், செலவினமாக ஒரு கோடியே 7 லட்சத்து 68 ஆயிரத்து 400 ரூபாவும் எதிர்பார்க்கப்படுகிறது.

மூலதனச் செலவினமாக ரூபா 25 லட்சம் ஒதுக்கப்பட்டுள்ளது.

இவற்றில் வீதிகள் திருத்த வேலைக்கு மூன்று லட்சம் ரூபாவும், கட்டடங்கள் அமைக்கவும் திருத்த வேலைக்கும் பன்னிரண்டரை லட்சம் ரூபாவும், விளையாட்டு மைதான அபிவிருத்திக்கு ஒரு லட்சம் ரூபாவும், மின்சார அபிவிருத்திக்கு இரண்டு லட்சம் ரூபாவும், நூல் நிலையங்களுக்கான புத்தக கொள்வனவுக்கு ஒன்றரை லட்சம் ரூபாவும், வாகனங்கள், இயந்திரங்கள் கொள்வனவு செய்ய மூன்று லட்சம் ரூபாவும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன.

அண்மையில் வெளியிடப்பட்ட நகரசபையின் வரவு செலவுத் திட்டத்தில் இவ்விவரங்கள் வெளியிடப்பட்டுள்ளன. (க-117)

ஆர்வத்துடன் தமிழ் கற்கும் சிங்கள ஊழியர்!

மாவனல்லை அரநாயக்காப் பகுதிகளில் உள்ள அரசாங்க செயலகங்களில் நடைபெற்று வரும் தமிழ் மொழி வகுப்புக்களில் சிங்கள ஊழியர்கள் பெரும் ஆர்வத்துடன் தமிழைக் கற்று வருகின்றனர் என்று தெரிவிக்கப்படுகிறது.

வாரத்தில் இரண்டு நாட்கள் நடைபெற்று வரும் தமிழ் மொழி வகுப்புக்களில் செயலக ஊழியர்களும் அவ்வப் பகுதி கிராம சேவையாளர்களும் பங்கு பற்றி வருகின்றனர். அரசகரும மொழி திணைக்களத்தினால் நடத்தப்பட்டு வரும் இந்த தமிழ் மொழி வகுப்பில் இறுதியில் நடைபெறும் விசேட பரீட்சையில் சித்தி பெறுபவர்களுக்கு சம்பள உயர்வு வழங்கப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (க-17)

தெற்கில் நிலவும் அவலம்:

தமிழில் திருமணப் பதிவு செய்ய முடியாத நிலை

மாத்தறை, காலி, களுத்துறை ஆகிய மாவட்டங்களில் உள்ள பெருந்தோட்டங்களிலும் நகரங்களிலும் வாழும் சுமார் ஒரு லட்சத்துக்கு மேற்பட்ட தமிழர்கள் தமது தாய்மொழியான தமிழில் திருமணப் பதிவு செய்ய முடியாமல் இருக்கின்றனர்.

திருமணப் பதிவாளர் காரியாலயங்களில் சிங்களம் தெரியாத தமிழ் ஜோடிகளுக்கும் சிங்களத்திலேயே திருமணச் சட்டதிட்டங்கள் வாசிக்கப்படும் நிலைமை நிலவுவதாக அறிய வருகிறது. (க)

அப்பலோ ஆஸ்பத்திரிகளை இலங்கையில் நிறுவப்படும்

கொழும்பு, டிச. 29

தமிழ் நாடு சென்னையில் உள்ள அப்பலோ ஆஸ்பத்திரி இலங்கையில் பிராந்தியக் கிளை ஆஸ்பத்திரி ஒன்றை கோட்டேயில் நிறுவ உத்தேசித்திருக்கிறது.

அப்பலோ ஆஸ்பத்திரிகள் தொகுதியின் தலைவர் ஜனவரியில் இது சம்பந்தமாக இலங்கை வருகிறார். நகர அபிவிருத்தி அதிகாரிகளுடன் ஆஸ்பத்திரியை நிர்மாணிப்பதற்காக ஒதுக்கப்பட்டிருக்கும் காணியை அவர் பார்வையிடுவார்.

சுமார் 100 கோடி ரூபா செலவில் இந்த ஆஸ்பத்திரி நிர்மாணிக்கப்பட இருக்கின்றது.

இது இயங்கத் தொடங்கியதும் தற்பொழுது இருதய சத்திரசிகிச்சைக்காக குறிப்பாக "பைபாஸ்" சத்திர சிகிச்சைக்காக தமிழ் நாடு செல்வோர் இங்கேயே அவற்றைச் செய்து கொள்ள முடியும். (க)

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் மரநடுகைத் திட்டம்

தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தால் எதிர்கால சந்ததிக்காக மலரப் போகும் தமிழீழத்துக்கு வளம் சேர்க்க பல்வேறு வகையான மரநடுகைத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்டு வருவது யாவரும் அறிந்ததே. கடந்த 91ஆம் ஆண்டு முதல் 13 லட்சத்து 46 ஆயிரத்து 800 மரங்கள் நடுகை செய்யப்பட்டுள்ளன.

மாவீரர் நினைவாக பல மரநடுகைத் திட்டங்களும் வருடம் தோறும் நடைமுறைப்படுத்தப்படுகின்றன. இந்த வகையில் 1993 ஆம் ஆண்டில் மாவீரர் வாரத்தில் தென்மராட்சிப் பிரதேசத்தில் கெற்பலி என்ற இடத்தில் 10 ஏக்கரில் ஆரம்பிக்கப்பட்டதே மாவீரர் சோலை பண்ணைக்காடு உருவாக்கத்தோடு கூடிய ஆரோடித் திட்டமாகும். இத்திட்டம் 1994இல் மேலும் 10 ஏக்கரில் விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

இத் திட்டத்தில் பல் பயன்தரு மரங்களுக்கு முக்கியத்துவம் கொடுக்கப்பட்டுள்ளமை ஓர் முக்கிய அம்சமாகும். வேம்பு ஏக்கருக்கு 109 கன்றுகள் என்ற அளவில் 218 கன்றுகளும் இதேபோன்று இலுப்பை, புளி, மலைவேம்பு ஆகிய ஒவ்வொன்றும் 218 கன்றுகள் வீதமும், சவுக்கு 870 கன்றுகளும் 1994 இல் நடுகை செய்யப்பட்டுள்ளன.

சிறிய கன்றுகளை பராமரிப்பதில் உள்ள சிரமத்தை குறைப்பதற்காக விசேடமாக பரல்களில் உற்பத்தி செய்து 4—6 அடிவரை வளர்த்து நடுகை செய்திருப்பது இன்னுமொரு சிறப்பம்சமாகும் என்பதாகும் யாரும். இதனால் இம்மரங்கள் வரண்ட காலத்திலும் வரட்சியை தாங்கி வளரும் என்பது உறுதிப்படுத்தப்படுகின்றது.

இத்திட்டம் அடுத்த ஆண்டில் மேலும் 08 ஏக்கரில் விஸ்தரிக்கப்படவுள்ளது. மேலும் இப்படியான திட்டங்களை உருவாக்கவும் தொடர் பராமரிப்புக்கும் பெருமளவு நிதி தேவைப்படுகின்றது. இதுவரை பலலட்சம் ரூபாய்கள் இத்திட்டங்களில் செலவிடப்பட்டுள்ளது. அரச, அரச சார்பற்ற நிறுவனங்கள் மற்றும் சூழல் காப்பாளர்கள் நிதி உதவி செய்யுமிடத்து மேலும் புதிய திட்டங்கள் உருவாகவும் இத்திட்டங்கள் விஸ்தரிக்கப்படவும் வாய்ப்பு ஏற்படும்— என்று தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (க)

கந்தரோடைக் கிராமத்தில்

உவர்நீரை நன்னீராக மாற்றும் முயற்சி வெற்றி

வலிகாமம் தெற்கு, டிச. 29

கந்தரோடைக் கிராமத்தில் உவர் நீரை நன்னீராக மாற்றுவதற்கு பரீட்சார்த்தமாக மேற்கொள்ளப்பட்டு வரும் முயற்சியில் குறிப்பிடத்தக்களவு வெற்றிகிடைத்திருப்பதாக தெரிய வருகின்றது.

பல காலமாக இக்கிராமத்தில் உள்ள கிணற்று நீரில் உவர்த்தன்மை கலந்திருப்பதை தொடர்ச்சியாக நீரை இறைத்து வெளியேற்றுவதன் மூலம் நன்னீராக மாற்ற முடியும் என்ற நம்பிக்கையில் இளைப்பாறிய பொறியியலாளர் திரு. முத்துத்தம்பி இரத்தினம் கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக இப்பரீட்சார்த்த ஆய்வினை மேற்கொண்டு வருகிறார்.

இவரது திட்டத்தின் படி இக்கிராமத்தில் உள்ள முப்பத்தியொரு கிணறுகள் கொத்தணி முறையாகத் தெரிவு செய்யப்பட்டு ஆய்வு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

இம் முயற்சியில் பயனாளிகள் திருப்தியடையக் கூடிய வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாகவும் —

இவற்றில் மூன்று கிணறுகளில் உள்ள உவர் நீர் முற்றாக நன்னீராக மாற்றமடைந்துள்ளதாகவும் —

ஏனைய கிணற்று நீர்களில் அறுபது வீதத்துக்கும் மேற்பட்டளவில் உவர்த் தன்மை நீங்கியுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டது.

கடந்த பருவமழை ஆரம்பமான காலம் முதல் இத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டு தினமும் கிணற்று நீர் முற்றாக அகற்றப்பட்டதாகவும் —

ஒவ்வொரு கிணறும் தொடர்ச்சியாக முப்பதுக்கு கூடிய முறையில் இறைக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்பட்டது. (ஒ-152)

சடலம் இலங்கை வருகிறது

கடந்த வாரம் அமெரிக்காவில் மரணமான பிரபல விஞ்ஞானி சிறில் பொன்னம்பெருமவின் சடலம் அடுத்த மாதம் 8 ஆம் திகதி கொழும்புக்கு எடுத்து வரப்பட விருக்கிறது.

கண்டி மகாஜவவில் அவரின் இறுதிக்கிரியைகள் நடைபெறும். (இ-3)

உருவப்படம் திறப்பு

கடந்த வருடம் பூநகரி தவளை நடவடிக்கையின் போது வீரச்சாவையடைந்த மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட படையணிப் பொறுப்பாளர் மேஜர் ரூபன் நினைவாக கிளாலி படகுகள் ஒட்டுனர் சங்கத்தினரால் கிளாலி இறங்குதுறையில் அமைக்கப்பட்ட நினைவுருவப் படமும் படிப்பகமும் கடந்த 17ஆம் திகதி திறந்து வைக்கப்பட்டது.

பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தைச் சேர்ந்த விசு தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் படகோட்டுனர் சங்கப் பிரதிநிதி தேவன், பொருண்மிய மேம்பாட்டுப் பிரிவைச்சேர்ந்த சந்திரன், மூத்த தளபதி கருணா, தென்மராட்சி அரசியல் நிர்வாகப் பொறுப்பாளர் வெற்றிச்செல்வன் உட்பட உரையாற்றினர். (க-117)

விளையாட்டு உபகரணங்கள் அன்பளிப்பு

வலி-மேற்கு பிரதேசசபைப் பகுதியில் இயங்கும் சனசமூக நிலையங்களுக்கிடையில் விளையாட்டு நிகழ்ச்சிகளை ஊக்குவிப்பதற்காக 20 சனசமூக நிலையங்கள் தெரிவு செய்யப்பட்டு அவற்றுக்கு இலவசமாக பந்துகள், வலைகள் ஆகிய பல்வேறு விளையாட்டு உபகரணங்கள் வழங்கப்படவுள்ளன.

எதிர்வரும் வியாழக்கிழமை சுழிபுரத்திலுள்ள வலி-மேற்கு பிரதேசசபை அலுவலகத்தில் வலி-மேற்கு பிரதேச சபையாளர் மேற்படி விளையாட்டு உபகரணங்களை சம்பிரதாய முறைப்படி கையளிப்பார். (ஒ-135)

அரச பெருந்தோட்ட கம்பெனிகள் நட்டத்தில்

கொழும்பு, டிச. 26

அரச பெருந்தோட்டக் கூட்டுத்தாபனத்தால் நிர்வகிக்கப்படும் 22 தனியார் கம்பெனிகளில் 20 கம்பெனிகள் பெரும் நட்டத்தில் இயங்குகின்றன என்று தெரிவிக்கப்படுகிறது.

கடந்த ஜூன் இறுதிவரை இவற்றுக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் 351 கோடி 76 லட்சம் ரூபா ஆகும்.

"சிலாபம் பிளான்ரேசன் லிமிட்டெட்", "குருநாகல் பிளான்ரேசன் லிமிட்டெட்" ஆகியவை இரண்டுமே இலாபத்தில் நடத்தப்படும் கம்பெனிகள் என்று தெரிவிக்கப்படுகிறது.

நட்டத்தில் இயங்கும் கம்பெனிகளில் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள கம்பெனி "மாத்தறை பிளான்ரேசன் லிமிட்டெட்" ஆகும்.

இந்த கம்பெனிக்கு வங்கிக் கடன் மட்டும் 16 கோடி 68 லட்சம். அத்துடன் 8 கோடி ரூபாவுக்கான கடன் பத்திரங்களையும் இது விநியோகித்துள்ளது.

பல தசாப்தங்களாக தோட்டங்கள் கவனிப்பாரற்று விடப்பட்டது தொழிலாளர்களுக்கான சம்பள உயர்வு, தொழிற்சங்கங்களின் தலையீடு உலக சந்தையில் பொருள்களுக்கு ஏற்பட்ட விலை வீழ்ச்சி ஆகியவையே இந்த கம்பெனிகள் நட்டத்தில் இயங்கக் காரணம் என்று தெரிவிக்கப்பட்டது. [இ]

புதிய வகை வற்றாளை

மன்னார் மாவட்டத்தில் செவ்விளநீர் தேங்காயைப் போன்ற தோற்றமுடைய புதிய இன வற்றாளை உற்பத்தியாக்கப்பட்டுள்ளது என்று மன்னார் மாவட்ட உதவி விவசாய பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த வற்றாழங்கிழங்கின் தண்டை யாழ்ப்பாணம் கொண்டுவந்து பயிரிடுவதற்கு யாழ். மாவட்ட விவசாய உற்பத்தி கூட்டுறவு சமாசம் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றது. (க-17)

கண்ணீர் அஞ்சலி

எமது பாடசாலை ஆசிரியை

திருமதி த. திருக்குமாரனின்

தாயார்

திருமதி

மங்கையர்க்கரசி குமாரசாமி

அவர்களின் மறைவு குறித்து எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்கம்

யா/கோப்பாய் மகா வித்தியாலயம். (34419)

அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்

அமரர்

சின்னத்தம்பிசடாட்சரசண்முகதாஸ்

[B.A.(Cey) S L.A.S.]

(பேரவைச் செயலாளர், மேலதிக செயலாளர் - கல்வி அமைச்சு, வடக்கு - கிழக்கு மாகாணசபை, திருகோணமலை)

புங்குடுதீவு 3ஆம் வட்டாரத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட அமரர் சின்னத்தம்பி சடாட்சரசண்முகதாஸ் அவர்களின் அந்தியேட்டிக் கிரியைகள் 28-12-94 அன்று முகத்துவாரத்திலும், வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 30-12-94 அன்று இல்லத்திலும் நடைபெற்றதால் உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் வருகைதந்து அன்னாரின் ஆன்ம சாந்திக்காகப் பிரார்த்தித்து மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

மற்றும் அன்னாரின் இறுதிக் கிரியைகளில் நேரடியாகப் பங்கு பற்றியோருக்கும், அனுதாபச் செய்திகளை அனுப்பியோருக்கும், கண்ணீர் அஞ்சலிகளை வெளியிட்டோருக்கும், பத்திரிகைகளுக்கும், இரங்கல் கூட்டங்களை நிகழ்த்தியோருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

தனிப்பட்ட முறையில் அழைப்புகளை வழங்க முடியாமைக்கும், தனிப்பட்ட முறையில் நன்றி கூற முடியாமைக்கும் வருந்துகின்றோம்.

அன்னாரின் ஆன்ம சாந்திக்காக எல்லாம் வல்ல இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மனைவி, மக்கள், உறவினர்கள்

30, எட்வட் லேன், கொழும்பு - 3 (34417)

தனியார் கல்வி நிறுவன ஒன்றியம்

பண்டத்தரிப்புக் கோட்டம்

மிக முக்கிய கலந்துரையாடல்

30 – 12 – 94 வெள்ளி மாலை 3-30 மணிக்கு சித்தன்கேணி சுப்றா கல்வி நிலையத்தில் 1995 ஆம் ஆண்டுக்கான புதிய நடைமுறை விதிகள் பற்றிய முக்கிய கலந்துரையாடல் நடைபெறும்.

சகல தனியார் கல்வி நிறுவன உரிமையாளர்களையும் பிரத்தியேக வகுப்புக்கள் நடத்தும் ஆசிரியர்களையும் தவறாது கலந்து கொள்ளும்படி கேட்டுக் கொள்கிறேன்.

குறிப்பு:

★ 30-12-94 அன்று மாலை 3 மணிக்குப் பின் சகல வகுப்புக்களையும் நிறுத்தி கலந்துரையாடலில் கலந்து கொள்ளவும்.

★ மீள் பதிவுக்கான இறுதித்திகதி 30 – 12 – 94 வெள்ளி காலை 9-00 மணி முதல் 12-00 மணி வரை செம்மணி வீதி, தனியார் கல்விப் பிரிவில் பதிவு செய்யலாம். பதிவு செய்யாதவர்கள் 30 – 12 – 94 திகதிக்கு பின் இயங்க அனுமதி யளிக்கப்படமாட்டாது என்பதையும் அறியத் தருகின்றோம்.

கு. நடேஸ்வரன்
செயலாளர்.

(ஒ-10116)

noolaham.org | aavanaham.org
Digitized by Noolaham Foundation.

இலங்கையில் தொடரும் யுத்தம்

அபிவிருத்திக்கு பெரும் அச்சுறுத்தல்

உலகவங்கி அறிக்கையில் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், டிச. 29

"குறைவான வளங்களின் மத்தியில் இலங்கையில் தொடரும் உள்நாட்டுப் போர் அதன் அபிவிருத்திக்கு பெரும் எச்சரிக்கையாக உள்ளது என்று உலக வங்கி தனது அறிக்கை ஒன்றில் குறிப்பிட்டுள்ளது.

நாட்டின் மொத்த சனத்தொகையில் 5இல் ஒருபகுதியினரின் நாளாந்த வருமானம் 50 ரூபாவிலும் குறைவாக உள்ளதால் இலங்கையில் வறுமை ஒழிப்புத் திட்டத்துக்கு உதவி வழங்கும் யோசனையை உலக வங்கி கைவிடவேண்டும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

அண்மையில் இலங்கை வங்கியின் பிரதிநிதிகள் குழு கொழும்பு வந்திருந்தது— தெரிந்ததே.

அந்தக் குழு நாட்டின் வருமான நிலை குறித்து ஆய்வு நடத்திய பின்னர் கடந்த மாதம் 7ஆம் திகதி அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

சர்வதேச மட்டத்துடன் ஒப்பிடுகையில் இலங்கையில் வேலையற்றோர் தொகை அதிகமாக உள்ளது. இதனை நீக்க தனியார் துறையில் கூடுதல் ஆட்களுக்கு வேலை வாய்ப்பு வழங்கப்பட வேண்டும்.

இன்னும் பல வருடங்களாக இலங்கை விவசாய நாடாகவே இருக்கும்.

ஆசிய நாடுகளுடன் ஒப்பிடுகையில் இலங்கையில் கல்விக்கு செலவிடும் நிதி வீதம் குறைவு எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ஐ-3)

ஜே. ஆர். தம்பதியருக்கு சந்திரிகா விருந்துபசாரம்

கொழும்பு, டிச. 29

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் துணைவியாரும் தற்போதைய ஜனாதிபதி சந்திரிகாவை அடுத்த வாரம் சந்தித்து குசலம் விசாரிப்பர் என எதிர்பார்க்கப்படுகின்றது.

ஜெயவர்த்தனா தம்பதியருக்கு விருந்துபசாரம் அளிக்க சந்திரிகா விடுத்த அழைப்பைத் தொடர்ந்தே இச்சந்திப்பு இடம்பெறவிருப்பதாக ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை மேற்கோள்காட்டி பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டது.

இதற்கிடையில்—

முன்னாள் ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் துணைவியார் எலினா ஜெயவர்த்தனாவும் திருமணம் செய்து புதிய ஆண்டில் அறுபது ஆண்டுகள் பூர்த்தியாவதாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். பஸ் நிலையத்தில் மலசலகூடம் நிறுவ முடிவு

யாழ்ப்பாணம், டிச. 29

யுனிசெவ் ஸ்தாபனத்தின் நகர்ப்புற அடிப்படைச் சேவைகள் நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் யாழ். புதிய பஸ் நிலையப் பகுதியில் இரண்டு மலசல கூடங்களை அமைப்பதற்கு யாழ். மாநகர சபை நடவடிக்கை எடுத்துள்ளது.

பஸ் நிலையப் பகுதியில் மலசல கூட வசதியின்றி அங்கு வரும் பயணிகள் பெரும் சிரமங்களை எதிர்நோக்கி வந்தனர்.

கிளாலி ஊடாக நள்ளிரவு இங்கு வந்து சேரும் பயணிகள் பலரும் மலம் கழிக்க இடவசதி இன்றி அவலப்படுவதுடன், அப்பகுதியை அசுத்தப்படுத்தியும் வருகின்றனர்.

இதனை கருத்திற் கொண்டே மலசல கூடங்களை அமைப்பதற்கு மாநகர சபை தீர்மானித்துள்ளது.

(ஒ-4)

பாலபட்ட பென்டியின் தலைமையில் மாவட்டங்களுக்கு அதிகாரிகள் குழு

மக்கள் பிரச்சினைகளை நேரில் கண்டறியும்

கொழும்பு, டிச. 29

மக்களின் பிரச்சினைகளை கண்டறிந்து அவற்றைத் தீர்க்கும் வகையில் உயரதிகாரிகள் குழு ஒன்று மாவட்டங்களுக்கு அடுத்த மாதம் முதல் விஜயம் செய்யவிருக்கிறது.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பணிப்பின் பேரில் ஜனாதிபதியின் செயலாளர் கே பாலபட்ட பென்டி தலைமையிலான உயரதிகாரிகள் குழுவே மாவட்டங்களுக்கு சென்று மாவட்ட செயலகங்களில் பொதுமக்களை சந்திக்கவிருக்கிறது.

அந்தக்குழு மக்களின் பிரச்சினைகளை கேட்டு அவற்றைத் தீர்க்க உடன் நடவடிக்கை எடுக்கும் என்று ஜனாதிபதி செயலகம் அறிவித்துள்ளது.

[ஐ-3-6]

மாகாண திணைக்களங்களிலுள்ள அரச ஊழியர்களுக்கு இடமாற்றம்

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ். மாவட்டத்தில் மாகாணசபையின் கீழ் உள்ள திணைக்களங்களில் நான்கு வருடங்களுக்குமேல் கடமையாற்றிய அரச ஊழியர்கள் வெளிமாவட்டங்களுக்கு இடமாற்றம் செய்யப்படவிருக்கின்றனர்.

யாழ். மாவட்டத்தில் பணியாற்றும் இந்த வகை ஊழியர்களின் விவரங்களை மாகாணசபை பிரதமசெயலாளர் திரு. செ. கணேசநாதன் யாழ். அரச அதிபர் திரு. க. பொன்னம்பலத்திடம் கேட்டுள்ளார்.

இடமாற்றத் திட்டத்தை வகுக்க உதவியாக வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஊழியர் வெற்றிடங்கள் பற்றிய விவரங்களை அந்த அந்த மாவட்ட அரச அதிபர்களிடம் திரு செ. கணேசநாதன் கேட்டுள்ளார்.

யாழ். மாவட்டத்தில் 4 வருட காலம் சேவையை பூர்த்திசெய்தவர்கள் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஏனைய மாவட்டங்களில் உள்ள திணைக்களங்களுக்கும், மாகாண சபையில் உள்ள அலுவலகங்களுக்கும் இடமாற்றம் செய்யப்படுவர்.

(இ-3)

நான் குற்றம் ஏதும் இழைத்திருந்தால் லஞ்ச ஆணைக்குழுவிடம் முறையிடுக

லயனல் பெர்னாண்டோ கூறுகிறார்

கொழும்பு, டிச. 29

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் ஆளுநராக தான் பதவி வகித்த காலத்தில் இடம்பெற்றதாக தெரிவிக்கப்பட்டிருக்கும் எந்தவொரு மோசடி குறித்தும் இலங்கை மோசடி தடுப்புபணியகத்துக்கும், புதிய அரசால் அமைக்கப்பட்டுள்ள லஞ்ச ஆணைக்குழுவுக்கும் தெரிவிக்கலாம்.

இப்படி வெகுஜன தொடர்பு சாதன, சுற்றுலா அமைச்சு செயலாளர் லயனல் பெர்னாண்டோ கூறியுள்ளார்.

தமக்கு எதிராகக் கிளப்பப்பட்டுள்ள குற்றச்சாட்டுக்கள் குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:

1993ஆம் ஆண்டு டிசம்பர் முதலாம் திகதி முதல் 94ஆம் ஆண்டு ஆகஸ்ட் 23ஆம் திகதி வரை வடக்கு-கிழக்கு மாகாண சபையின் ஆளுநராக பணியாற்றினேன்.

எனது பதவிக் காலத்தில் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் என்னைச் சந்திப்பதற்கு எந்தவொரு கட்டத்திலும் அவகாசம் கோரவில்லை.

கல்வியமைச்சில் முறையான நிர்வாகம் நடைபெறுவதாக அவர்கள் எனது கவனத்துக்கு கொண்டுவரவுமில்லை.

வடக்கு-கிழக்கு மாகாணத்தின் கல்வியமைச்சில் லட்சக்கணக்கான ரூபா சம்பந்தப்பட்ட எந்தவொரு மோசடியாவது இடம்பெற்றதாக முறைப்பாடு செய்யவும் இல்லை.

நான் ஆளுநராக பதவி வகித்த காலத்தில் வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இடம்பெற்ற நிர்வாகத்துக்கான முழுப் பொறுப்பையும் ஏற்றுக்கொள்கிறேன்.

நான் பதவி ஏற்க முன்போ நான் பதவி துறந்த பின்போ அங்கு இடம்பெற்ற எந்த விவகாரத்துக்கும் பொறுப்பல்ல—

இப்படித் தெரிவிக்கப்பட்டுள்ளது.

விடுதலைப் புலிகளுடனான பேச்சுவார்த்தை நடத்துவதற்காக யாழ்ப்பாணம் வந்த அரச தூதுக்குழுவில் லயனல் பெர்னாண்டோவும் இடம்பெற்றிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

(இ-3)

புலிகளுடன் பேச முனைவதாலேயே அரசுக்கு ஆதரவு அளிக்கிறோம்

கூட்டணி எம். பி. விளக்கம்

மட்டக்களப்பு, டிச. 29

"இலங்கையின் இனப்பிரச்சினையை புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தித் தீர்க்க வேண்டும் என்ற முனைப்புடன் இன்றைய ஜனாதிபதி செயற்பட்டு வருகிறார். இதனால் இந்த யதார்த்த நிலையை உணர்ந்து இனப்பிரச்சினை தொடர்பாக அவர் எடுக்கும் முயற்சிக்கு ஆதரவான நோக்குடன் எதிர்க்கட்சி வரிசையிலிருந்து ஆதரவு வழங்கி வருகிறோம்".

மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராசசிங்கம் இவ்வாறு தெரிவித்தார்.

கடந்த 21 ஆம் திகதி எருவில் தமிழர் விடுதலைக் கூட்டணிக் கிளையினரால் த. வி. கூ. மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்ட வரவேற்பு வைபவத்தில் உரை நிகழ்த்தும் போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் கூறியதாவது:

ஜனாதிபதி சந்திரிகா தேர்தலின் முன்பும்பின்பும் தமிழ் மக்களுக்குப் பிரச்சினைகள் இருக்கின்றன; இவற்றுக்கு விடுதலைப் புலிகளுடன்பேச்சுவார்த்தை நடத்தித் தீர்வு காண்பதாகத்தெரிவித்து வருகிறார். அவருக்கு இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு ஒரு சந்தர்ப்பத்தை வழங்க வேண்டும் என்பதற்காகவே தமிழர் விடுதலைக்கூட்டணியினரான நாம் எமது தனித்துவத்தைப் பேணுவதுடன் எதிரணியிலிருந்து அரசுக்கு ஆதரவு வழங்கி வருகிறோம் என்றார்.

(ஈ)

அடையாள அட்டைகளில் பெருவிரல் அடையாளம்

அரசு தீவிரமாக ஆராய்கிறது

கொழும்பு, டிச. 29

தேசிய அடையாள அட்டைகளில் இடம்பெறும் மோசடிகளைத் தவிர்க்க விரல் அடையாளங்களையும் அடையாள அட்டையில் இடம்பெறச் செய்வது தொடர்பாக அரசு ஆராய்ந்து வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

தற்போது நடைமுறையில் உள்ள அடையாள அட்டைகளில் படங்களை மாற்றி மோசடி நடப்பதால் அடையாள அட்டையால் பிரயோசனம் இல்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

விரல் அடையாளத்தை அடையாள அட்டையில் இடம்பெறச் செய்வதன் மூலம் மோசடிகளை தவிர்க்கலாம் என்றும்—

விரல் அடையாளத்தை வைத்து சாதாரண எலக்ரோனிக் கருவி மூலம் சம்பந்தப்பட்டவர்களை கண்டுபிடிக்க முடியும் என்றும்— தெரிவிக்கப்பட்டது.

(ஐ-3)

கரும்புலிகள் நாள் போட்டி பரிசளிப்பு

யாழ்ப்பாணம் டிச. 29

விடுதலைப் புலிகளின்யாழ். மாவட்டக் கலை பண்பாட்டுக் கழகத்தினால் நடத்தப்பட்ட 'கரும்புலிகள்' நாள் அரங்க பாரம்பரிய போட்டிகளில் வெற்றியீட்டியோருக்கான பரிசளிப்பு விழா நேற்று முன்தினம் மாலை யாழ். இந்து மகளிர் கல்லூரி மண்டபத்தில் நடைபெற்றது.

கலை பண்பாட்டுக் கழகத்தின் மகளிர் பிரிவுப் பொறுப்பாளர் செல்வி கலைமணி தலைமையில் நடைபெற்ற இவ் விழாவில் 53 தரமான நிகழ்ச்சிகளுக்கான பரிசில்களை அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. சுப தமிழ்ச்செல்வன் வழங்கினார்.

விழாவை கடற்கரும்புலி கப்டன் அங்கையற்கண்ணியின் தாயார் திருமதி துரை சிங்கம் மங்கள விளக்கேற்றி ஆரம்பித்து வைத்தார்.

வரவேற்புரையை யாழ். மாவட்ட கலை பண்பாட்டுக் கழக பொறுப்பாளர் திரு. ஆ. குமணன் நிகழ்த்தினார்.

சிறப்புரைகளை திரு. ச. காந்திதாசன், யாழ்.மாவட்ட மகளிர் அமைப்பு பொறுப்பாளர் செல்வி தணிகைச் செல்வி, யாழ் மாவட்ட அரசியல்துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பருதி ஆகியோரும் நன்றியுரையை வலிகாமம் கோட்ட கலை பண்பாட்டுக் கழகப் பொறுப்பாளர் திரு. பொழிலனும் நிகழ்த்தினர்.

இறுதியில் கலை நிகழ்ச்சிகளும் நடைபெற்றன.

(இ-4)

சேதன பசளை உற்பத்தி திட்டம்

யாழ்ப்பாணம், டிச. 29

யாழ். மாநகராட்சி மன்றம் சேதன பசளை உற்பத்தி செய்யும் திட்டம் ஒன்றை ஆரம்பித்துள்ளது.

சேதன பசளையைத் தயாரித்து சந்தைப்படுத்துவதற்கான இயந்திரக் கருவி ஒன்றைப் பெறுவதற்கு மாநகர ஆணையாளர் முயற்சிகளை மேற் கொண்டுள்ளார்.

சந்திரிகா மாலைதீவு பயணம்

கொழும்பு டிச. 29

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க தனது பிள்ளைகளுடன் விடுமுறையைக் கழிப்பதற்காக நேற்று முன்தினம் மாலைதீவுக்கு சென்றுள்ளார்.

அடுத்த மாதம் 4ஆம் திகதி அவர் நாடு திரும்புவார் என்று தெரிவிக்கப்பட்டது.

மாலைதீவு புறப்பட முன்னர் சந்திரிகா விடுமுறையைக் கழிப்பதற்காக நுவரேலியா சென்றிருந்தார்.

(ஐ-3)

கனகராசாவுக்கு 'தேசாபிமானி' விருது

யாழ்ப்பாணம், டிச. 29

தமிழ்த்தாய் மன்றத்தினர் "மாற்றம்" சஞ்சிகையின் ஆதரவுடன் நடத்தும் "தேசாபிமானி" விருதுப் போட்டியில் இம்முறை கலாநிதி க. கனகராசா தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

கணிசமான அபிப்பிராய வாக்கு வித்தியாசத்தில் திரு. கனகராசா ஏகோபித்த ஆதரவுடன் தெரிவு செய்யப்பட்டதாக தமிழ்த்தாய் மன்றத்தினர் தெரிவித்துள்ளனர்.

சுற்றுப் புறச் சூழலைப் பேணுவதிலும், மரங்களை நட்டு பசுமை உண்டாக்குவதிலும் நீண்ட காலமாக ஆர்வத்துடன் தொண்டாற்றி வரும் திரு. கனகராசாவுக்கு எதிர்வரும் ஜனவரி 2 ஆம் திகதி "தேசாபிமானி - 94" விருது வழங்கப்படும்.

நல்லூர் நாவலர் கலாசார மண்டபத்தில் நிகழும் விருது வழங்கும் விழாவுக்கு பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் (நந்தி) தலைமை வகிப்பார்.

(அ)

தென்னங்கன்று

யாழ்ப்பாணம், டிச. 29

நல்லூர் கமநல சேவைகள் திணைக்களம் தென்னங்கன்றுகளை விநியோகித்து வருகின்றது. தென்னங்கன்று ஒன்று 45 ரூபாவுக்கு விற்கப்படுகின்றது.

(க-17)

எரிக்கப்பட்ட நிலையில் சடலம்

கொழும்பு, டிச. 29

கொழும்பு ஜிந்துப்பிட்டியில் அரைகுறையாக எரிக்கப்பட்ட நிலையில் ஓர் ஆணின் சடலத்தை பொலீஸார் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைப்பற்றியுள்ளனர்.

35-40 வயதுக்கு இடைப்பட்ட இவர்வேறொரு இடத்தில் கொலை செய்யப்பட்டு இங்கு கொண்டு வரப்பட்டு பெற்றோல் ஊற்றி எரிக்கப்பட்டிருக்கலாம் எனப் பொலீஸார் சந்தேகிக்கின்றனர்.

கொழும்பு ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டுள்ள இந்தச் சடலம் குறித்து பொலீஸார் விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

[இ-3]

புலிகளின் குரல் வானொலியில்

29 — 12 — 1994

வியாழன் இரவு

★ 8-01 — சொல்லுங்கள் பார்க்கலாம்
★ 8-10 — சித்த மருத்துவக் குறிப்புகள்
★ 8-20 — உழைப்போம் உயர்வோம் நிகழ்ச்சியில் "நவத்தார் குடும்பம்" குறு நாடகம்
★ 8-30 — செய்திகள்
★ 8-40 — ஏட்டிலிருந்து நாடகம், நாட்டாரியற் சிந்தனைகள் என்ற நூலிலிருந்து "ஈழத்துக் கூத்து மரபு" எனும் கட்டுரையின் சில பகுதிகள்.
★ 8-50 — மலரும் மொட்டுக்கள்
★ 9-00 — மணிக்கு நிகழ்ச்சிகள் யாவும் நிறைவு பெறும்.

30 — 12 — 1994

வெள்ளி காலை

★ 7-02 — மாவீர வணக்கம்
★ 7-15 — மணியாரம்
★ 7-30 — செய்திகள்
★ 7-35 — பத்திரிகைச் செய்திகள்
★ 7-40 — தாயகப் பாடல்கள்
★ 8-05 மணிக்கு காலை நிகழ்ச்சிகள் யாவும் நிறைவுபெறும்.

எதிர்க்கட்சி எம்.பிக்கள் 153 பேரும் ராஜினாமா!

பங்களாதேஷில் அரசியல் நெருக்கடி

டாக்கா, டிச. 29

பங்களாதேஷில் எதிர்க்கட்சி எம். பிக்கள் அத்தனை பேரும் எம். பி. பதவியிலிருந்து ராஜினாமா செய்ததை அடுத்து பங்களாதேஷில் புதிதாக அரசியல் நெருக்கடி உருவாகி உள்ளது.

நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட்டு காபந்து அரசாங்கம் ஒன்றை அமைக்கும்படியும் —

காபந்து அரசாங்கத்தின் மேற்பார்வையில் பொதுத் தேர்தலை நடத்தும்படியும்— எதிர்கட்சிகள் கோரிக்கை விடுத்திருந்தன.

இதற்கான காலக்கெடுவும் விதிக்கப்பட்டிருந்தது

காலக்கெடு முடிவடைந்ததை அடுத்தே நேற்றுக் காலை எதிர்க்கட்சி எம். பிக்கள் 153 பேரும் சபாநாயகரிடம் தமது ராஜினாமாக் கடிதங்களைச் சமர்ப்பித்தனர்.

அரசாங்கம் தமது கோரிக்கையை உதாசீனம் செய்ததால் தமது போராட்டம் வீதிக்கு வந்திருப்பதாக அவாமிலீக்கைச் சேர்ந்த எதிர்க்கட்சித் தலைவி ஷேய்க் ஹசீனா தெரிவித்தார்.

இதற்கிடையில், எதிர்க்கட்சி உறுப்பினர்களின் ராஜினாமாவால் எழுந்த நிலைமையை ஆராய்வதற்காக பங்களாதேஷ் பிரதமர் காலிதாஜியா நேற்று ஆளும் பங்களாதேஷ் தேசியக் கட்சியைக் கூட்டினார்.

(இ)

இந்த ஆண்டில் நூற்றுக்கதிகமான பத்திரிகையாளர் கொலை

றுவாண்டாவில் மட்டும் 48 பேர்

லண்டன், டிச. 29

இந்த ஆண்டு உலக நாடுகளில் 100 க்கும் மேற்பட்ட பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர் என்று உலக பத்திரிகையாளர் சம்மேளனம் அறிவித்துள்ளது.

இதில் றுவாண்டாவிலேயே கூடுதலான பத்திரிகையாளர்கள் கொல்லப்பட்டுள்ளனர்.

இந்த ஆண்டு றுவாண்டாவில் நடைபெற்ற பெரும்பான்மை ஹுத்து இன மக்களுக்கும் சிறுபான்மை துட்சி இன மக்களுக்கும் இடையிலான இன மோதல்களில் சிக்கி 48 பத்திரிகையாளர்கள் உயிரிழந்துள்ளனர்

அடுத்ததாக அல்ஜீரியாவில் 19 பத்திரிகையாளர்களும், பொஸ்னியாவில் 7 பத்திரிகையாளர்களும் கொலம்பியாவில் 5 பத்திரிகையாளர்களும் கொல்லப்பட்டுள்ளனர்.

கடந்த காலங்களுடன் ஒப்பிடுகையில் இந்த எண்ணிக்கை அதிகம் என்று தெரிவிக்கப்படுகிறது.

(இ)

யுத்தத்தை நிறுத்த ஐ. நா. படைத்தளபதி பிஹாஜ் புறப்பட்டார்

சரயோவோ, டிச. 29

பொஸ்னியாவில் தொடர்ந்து நடைபெற்று வரும் சண்டையை நிறுத்த பொஸ்னியாவில் உள்ள ஐ.நா படைத் தளபதி மைக்கல் றோஸ் பிஹாஜ் புறப்பட்டுள்ளார்.

பொஸ்னியாவில் கடந்த சனிக்கிழமை முதல் பொஸ்னியா சேர்பியர்களுக்கும்— முஸ்லிம் அரச படைகளுக்கும் இடையில் யுத்த நிறுத்தம் அமுலுக்கு வந்திருப்பதும் தெரிந்ததே.

ஆனால் பொஸ்னியாவில் உள்ள ஐ. நா. சட்டுப்பாட்டு பிரதேசங்களில் ஒன்றான பிஹாஜின் சுற்றுப் புறங்களில் பொஸ்னிய முஸ்லிம் அரச படைகளுக்கு எதிரான முஸ்லிம் கிளர்ச்சிப் படைகளும் குறோசிய சேர்பியர்களும் தாக்குதல் நடத்தி வருகின்றன.

இந்த சண்டையை நிறுத்தவே மைக்கல் றோஸ் பிஹாஜ் சென்றுள்ளார். பொஸ்னியாவில நான்கு மாதகால யுத்த நிறுத்தம் அறிவிக்கப்பட்டுள்ளது.

(இ)

அமெரிக்க விமானியை விடுவிக்க முயற்சி

வடகொரியாவினால் கைப்பற்றப்பட்ட அமெரிக்க ஹெலிகொப்டர் விமானியை விடுவிக்கும் நோக்கத்துடன் அமெரிகா தனது தூதுவர் ஒருவரை வடகொரியாவுக்கு அனுப்பி உள்ளது.

ராஜதந்திரியான தோமஸ் ஹப்பார்ட் வடகொரியா சென்றுள்ளார்.

இம்மாத முற்பகுதியில் வடகொரிய ஆகாயப் பிராந்தியத்துக்குள் வைத்து இந்த ஹெலிகொப்டர் சுட்டு வீழ்த்தப்பட்டது தெரிந்ததே.

இதில் ஒரு விமானி இறந்து விட்டார். மற்றவரை வடகொரியா பிடித்து வைத்துள்ளது.

(இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சின்னஞ்சிறு விளம்பரம்

விற்பனைக்கு

கிறிஸ்மஸ் சோடனை, அழகுசாதனப் பொருள்கள், பிளாஸ்டிக் பொருள்கள், பொலித்தீன் வகைகள் பெற்றுக் கொள்ள நாடுங்கள்: ஜெயா அழகுமாடம், இல. 187, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். (சி-9838)

செவிப்புலன் கருவி விற்பனைக்குண்டு. (Ear Phone Latest) தொடர்பு கொள்ளவும்: தனரத்தினம், இல. 3, மூன்றாம் குறுக்குத் தெரு, யாழ்ப்பாணம். [34411]

நாட் குறிப்பேடு

நகை மாளிகை மற்றும் வர்த்தக பிரமுகர்களுக்கும் உங்கள் வாடிக்கையாளர்களுக்கும் புத்தாண்டு அன்பளிப்பாகக் கொடுப்பதற்கு மிகச் சிறப்பான பெரிய நாட் குறிப்பேடு (டயறி) விலை ரூபா 65/- மட்டும். மற்றும் திருமண அழைப்பிதழ் பத்திரங்களும் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம். ஆனந்தா அச்சகம், 226, காங்கேசன்துறைச் சாலை, யாழ்ப்பாணம். (சி-10111)

அப்பியாசக் கொப்பி

பாடசாலை மாணவர்களுக்கான அப்பியாசக் கொப்பிகளும், ஆண்டு 1 தொடக்கம் உயர்கல்வி வரையிலான பாடப்புத்தகங்களும் மலிவு விலையில் விநியோகிக்கப்படுகின்றன. நேர் அட்டவணை, கலண்டர்களும் இல்வசம், அறிவகம் புத்தகசாலை. 374, மணிக்கூட்டு வீதி (வெலிங்டன் சந்திக்கு அருகில்), யாழ்ப்பாணம். (சி-9936)

தவறிவிட்டது

உயரப்புலம் சோதிடர் இராசையா வீட்டுக்கும் ஆனைக்கோட்டை நவாலி வீதி, மூத்தனைனார் கோயிலடிக்கும் இடையில் க. ஜெயபாலசிங்கத்தின் சாதகக் கொப்பி 26-12-94 திங்கட்கிழமை நண்பகல் தவறிவிட்டது. கண்டெடுத்தவர்கள் தயவுசெய்து ஆனைக்கோட்டை, நவாலி வீதியில் உள்ள செல்வம் சைக்கிள் கடையில் ஒப்படைக்கவும். சன்மானம் வழங்கப்படும். [34412]

மணிக்கூடு திருத்தல்

சகலவித மணிக்கூடுகளையும் மற்றும் றேடியோக்கள், ரி. வி. டெக்குகளை பழுது பார்த்துக் கொள்ள ஆல்கா வாச் அன்ட் றேடியோ வேக்ஸ், 284, ஸ்ரான்லி வீதி (ஆரியகுளம் சந்தி), யாழ்ப்பாணம். கிளைகள்: கண்டி வீதி, சாவகச்சேரி, மானிப்பாய் வீதி, ஆனைக்கோட்டை. (சி-9912)

இராசிப் பலன்கள்

வியாழ மாற்றப் பலா பலன்கள் 1995 புத்தாண்டுப் பலன்கள் ரூபா 10/- எல்லா ராசிப் பலன்கள் எங்கும் விற்பனையாகின்றன. (நூலாசிரியர் சத்யா) பாடசாலை அலுவலக உபகரணங்களுக்கும் இந்திய – இலங்கை சஞ்சிகைகளுக்கும் துர்க்கா, ஸ்ரேசனர்ஸ், சுன்னாகம். [7844]

இலகு திருமண சேவை

23 வயது, மகம், செவ்வாயற்ற, கிரகபாவம் 37 மணப் பெண்ணுக்கு ஏற்ற மணமகன் வியாபாரம் அல்லது அரச சேவையில் உள்ளவர் தேவை. தொடர்பு: ஞாயிறு சாலையில். து. விமலா, யாழ். நாச்சிமார் கோயிலடி. (34372)

கதிரை பின்னல்

சகல விதமான இரும்புக் கதிரைகள் பின்னுபவர்களும், பழைய இரும்புக்கதிரைகள் விலைக்கு வாங்குபவர்கள் ராஜன் பின்னல் அகம், 286, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம், ஆரியகுளம் சந்தி. [சி-66]

புத்தகங்கள்

5ஆம் ஆண்டு புலமைப்பரிசில் Bright இன் புத்தகங்கள் கணிதம் ரூபா 60/- தமிழ் 50/- 20 மாதிரி வினாத்தாள்கள் 80/- இலகு முன்னோடிப் பயிற்சிகள் 80/. பூபாலசிங்கம் மற்றும் பிரபல புத்தகசாலைகளில் பெற்றுக் கொள்ளலாம். (34302)

கலண்டர்கள்

பொக்கற் கலண்டர்கள் சகல விதமான நினத்தாள் கலண்டர்கள் அன்பளிப்பு அடிக்கும் கலண்டர்கள் பெரிய, சிறிய சிலிப் தனியாக மொத்தமாகப் பெற்றுக் கொள்ளலாம். காந்தி அறிவகம், இல. 330, காங்கேசன் துறைசாலை, யாழ்ப்பாணம். (34304)

சீவம்ஸ் கலண்டர்

இரகுநாதையர் பஞ்சாங்கப்படி கணித்து வெளிவந்துள்ளது சீவம் கலண்டர். விலை குறைக்கப்பட்டுள்ளது. மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனையாகின்றது. அப்பியாசக் கொப்பிகள் தாராளமாகக் கிடைக்கும். மக்மிலன் புத்தகசாலை, ஸ்ரீகாந்தா புத்தகசாலை, யாழ்ப்பாணம். (சி-47)

ஓடர்கள் கவனிக்கப்படும்

சிறுவர் பெரியோர்களுக்கான றெடிமேட் ஆடைகள் மற்றும் சாறி பிளவுஸ், ஆண்களுக்கான ரவுஸர் ஷேர்ட் பெண்களுக்கான பாட்டி பிறக் ஆகியவற்றை குறித்த தவணையில் தைத்து பெற்றுக் கொள்ளலாம். வியாபாரிகளுக்கு சலுகை விலைகள் தொடர்பு: சிறி காமன்ஸ், பலாலி வீதி, திருநெல்வேலி. கிளை: சிவபதி, இணுவில். [சி-74]

சிவாகி

கல்வி நிலையம்

சாவகச்சேரி

94இல் பரீட்சை எடுத்த மாணவர்களுக்கான மீட்டல் வகுப்புகள் நடைபெறுகின்றன.

ECO — 6-30—7-30
ACC./TAM. 7-30—8-30
COM. — 8-30—9-30
GEO. LOG. POL.) — 9 30—10-30
H. Cul. — 10-30—11-30
HIND. — 11-30—12-30

[34395]

பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறி 1993 / 94

பட்டப்பின் கல்வித் தகைமை கற்கை நெறிக்கான விரிவுரைகள், முழு நேர மாணவர்களுக்கு 1995-01-17ஆம் திகதியும், பகுதி நேர மாணவர்களுக்கு 1995-01-21 ஆம் திகதியும் ஆரம்பமாகும்.

இக்கற்கை நெறிக்கு "நிரந்தர பட்டதாரி ஆசிரியர்" என்ற நியமனக் கடிதம் இன்றி, 1994-10-20 ஆம் திகதி நடைபெற்ற நேர்முகப் பரீட்சைக்கு சமுகமளித்த விண்ணப்பதாரிகளும், இந் நியமனக் கடிதத்தைச் சமர்ப்பித்து 1995-01-10ஆம் திகதிக்கு முன் கல்விக் கிளையில் பதிவு செய்யலாம். இதற்கான கடிதங்களும் தபால் மூலம் அனுப்பப்பட்டுள்ளன.

— பதிவாளர்.

23-12-1994

சி-10110)

எல்லா விஷயங்களும் அடங்கியது ஆனால் விலை மலிவானது!

ஆனந்தா பஞ்சாங்கக் கலண்டர்

ரூபா 30/- மட்டுமே.

[சி-79]

சனசமூக நிலையங்களுக்கு விளையாட்டுப் பொருள்கள்

யாழ்ப்பாணம், டிச. 28

யாழ். மாநகரசபை பகுதிக்குள் சிறப்பாக இயங்கும் 14 சனசமூக நிலையங்களுக்கு இவ்வருடமும் ஊஞ்சல், ஆடும் பலகை (சீ-சோ) போன்ற விளையாட்டு உபகரணங்கள் யாழ் மாநகரசபையால் வழங்கப்பட இருப்பதாக தெரிவிக்கப்பட்டது.

யாழ். மாநகரசபை நிதியில் இருந்து மாநகரசபை வேலைத்தளத்திலேயே நிர்மாணிக்கப்பட்ட இவ்விளையாட்டு உபகரணங்கள் இம்மாத இறுதிக்குள் சனசமூக நிலையங்களிடம் கையளிக்கப்படும்.

சென்றவருடமும் இவ்வாறு 14 சனசமூக நிலையங்களுக்கு இவ்விளையாட்டு உபகரணங்கள் யாழ். மாநகரசபையால் கையளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (க-4)

விநியோகம்

வலிகாமம் தெற்கு, டிச. 28

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் உள்ள அகதி முகாம்களுக்கு வெளியே தங்கி வாழும் இடம்பெயர்ந்த குடும்பங்களுக்கு ஹரிக்கேன்விளக்குகள் வழங்கப்பட்டு வருகின்றன.

அந்தந்தப் பகுதி கிராம சேவையாளர்கள் மூலம் இவ்விளக்குகளை ரி. ஆர்.ஓ. நிறுவனம் விநியோகம் செய்து வருகின்றது. (க-152)

விக்னா கல்வி நிறுவனம்

94 பரீட்சையில் தோற்றியவர்களுக்கான

மீட்டல் (SAT., SUN.)

பொருளியல	—	திரு. லோகசிங்கம் 10 மணி
கணக்கியல	—	திரு. S.K பிரபாகரன் 12 மணி
வர்த்தகம்	—	திரு வரதன் 11 மணி
அளவையியல	—	திரு. விக்கி 9 மணி

புவியியல் 3.00 மணி — 5.00 மணி

✶ ஆரம்பமாகி விட்டன ✶

(சி-75)

விக்னா கல்வி நிறுவனம்

94 பரீட்சையில் தோற்றியவர்களுக்கான

மீட்டல் DAY CLASS

[8—00 — 2—00 மணி]

பொருளியல	—	திரு. இராஜேஸ்வரன்
கணக்கியல	—	திரு. எஸ் கே. பிரபாகரன்
வர்த்தகம்	—	திரு. சிவப்பிரகாசம்
அளவையியல	—	திரு. ஏ. பிரபா
தமிழ்	—	திரு. குழந்தை

திங்., செவ். வியா., வெள்ளி
4-30 மணி — 6-00 மணிவரை நடைபெறும்.

(சி-77)

தமிழீழ காவல்துறை பதவி வெற்றிடங்கள்

1. எழுதுவினைஞர்கள்

கல்வித் தகைமை:
க. பொ. த. (உயர்தரம்) சித்தி. அல்லது க. பொ. த. (சாதாரண தரம்) தமிழ்மொழி, கணிதம்/எண்கணிதம் உட்பட ஐந்து திறமைச்சித்யுடன் ஆறு பாடங்களில் சித்தியடைந்திருத்தல் வேண்டும்.

வயது:
20 தொடக்கம் **30** வரை

மேற்படி தகைமையுடைய ஆண்/பெண் இருபாலாரும் 02-01-1995 தொடக்கம் 06-01-1995 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரில் எழுத்து மூல விண்ணப்பத்துடன் உரிய சான்றிதழ்களுடனும் சமுகம் தரவும்.

2. சாரதிகள் (வாகனம் செலுத்துபவர்) / மெக்கானிக்–இலேசான, பாரமான வாகனங்கள்

கல்வித் தகைமைகள்:
8ஆம் வகுப்புக்கு மேல்

வயது:
25 தொடக்கம் **40** வரை

உயரம்:
5' 6''

அனுபவமுள்ளவர்கள் சான்றிதழ்களுடனும் வாகனம் செலுத்தும் அத்தாட்சிப் பத்திரங்களுடனும் 02-01-1995 தொடக்கம் 06-01-1995 வரை பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு நேரில் சமுகம் தரவும்.

3. சமையலாளர்கள்

தகைமைகள்:
சமையல் தொழில் குறைந்தது மூன்று வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.

வயது:
30இற்கு மேல்

மேற்படி தகைமையுடைய ஆண் சமையலாளர்கள் பழைய பூங்காவிலுள்ள தமிழீழ காவல்துறை அலுவலகத்திற்கு 02-01-1995 தொடக்கம் 06-01-1995 வரை நேரில் சமுகம் தரவும்.

— நன்றி —

"புலிகளின் தாகம் தமிழீழ தாயகம்"

பொறுப்பாளர்,
தமிழீழ காவல்துறை.

[சி-10112]

கண்ணீர் அஞ்சலி

இரத்தினம் குலராஜசிங்கம்

(மக்கள் வங்கி, பருத்தித்துறை)

94-12-28 பரமபதமெய்திய எமது சக ஊழியர் அமரர் இ. குலராஜசிங்கம் அவர்களது பிரிவையிட்டு ஆழ்ந்த கவலையை அவரது மனைவி, மகள் ஆகியோருக்குத் தெரிவிப்பதோடு, அன்னாரின் ஆத்மா சாந்தியடைய இறைவனை இறைஞ்சுகின்றோம்.

முகாமையாளரும்,
சக ஊழியர்களும்.

மக்கள் வங்கி,
பருத்தித்துறை.

(8162)

31ஆம் நாள் நினைவு கூரல்

அமரர் அந்தோனி ஜோர்ஜ்

மண்ணில்: 04 — 06 — 1942
விண்ணில்: 30 — 11 — 1994

அன்புத் துணையே ஆருயிர்த் தந்தையரே
இன்பச் சோதரனே எங்களது மாமாவே
வன்மனம் இல்லாப் பேரனே என் மகனே
நன்மனம் கொண்டதோ நமை மறக்க
மறந்து நீர் சென்றாலும் மறையாது உன் சிரிப்பு
திறம் மிக்க நல்மனம் தீமையிலா உன்செயல்கள்
பறந்தடித்த பந்தாட்டம் பாசமுடன் பழகு குணம்
இறக்காது இறையடியில் இருக்கவென வேண்டுகிறோம்

பாசமுடு:
மனைவி, மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், தாய்,
சகோதரர், உற்றார்,
உறவினர், நண்பர்கள்.

15/1, 1ஆம் குறுக்கு வீதி,
பாஷையூர்,
யாழ்ப்பாணம்.

இவரது ஆன்ம இளைப்பாற்றிற்காக பாஷையூர் புனித அந்தோனியார் ஆலயத்தில் நாளை (30-12-94) வெள்ளிக்கிழமை காலை 6-15 மணிக்கு இரங்கல் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்படும்.

[34413]

நினைவஞ்சலி

31 ஆவது நாள் 7ஆவது வருடம்



கனகர் செல்லத்துரை	செல்லத்துரை ராசம்மா
பிறப்பு: 20-09-1914	பிறப்பு: 20-11-1925
இறப்பு: 29-11-1994	இறப்பு: 06-11-1987

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன்
வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்"

ஆ. குணரத்தினம்
84, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

(34405)

நயினைத்தாய் புறந்தந்த நன்மைத்துனர்கள்

அமரர் உயர்திரு சு. குமாரசாமி	அமரர் வதுவான் சி. குமாரசாமி
தோற்றம்: 04 — 08 — 1903	தோற்றம்: 26 — 11 — 1923
மறைவு: 23 — 12 — 1992	மறைவு: 08 — 01 — 1994
திதி: 01-01-1995	திதி: 29-12-1994

"உங்கள் வாழ்வும் வளமும்
எங்களுக் கென்றும் விழுத்துணை"

மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள்.

(34408)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
292/2 நாவலர் வீதி
யாழ்ப்பாணம்

விடுமுறைப் பலவீனம்!

சமாதானப் பேச்சு முன்னேற்பாடுகள், தொழிலாளர்களின் வேலை நிறுத்த விவகாரம், வெளிநாட்டு வேதனத்தில் நிறுவப்பட்ட தொழிற்சாலைகள், மூடப்படுதல் மற்றும் நாட்டு நிர்வாகத்தின் பல முக்கிய அலுவல்களை அப்படி அப்படியே இடைநடுவில் ''தொப்''பென போட்டுவிட்டு, ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கா விடுமுறையில் சென்றுள்ளார்!

எதிர்வரும் இரண்டாம் திகதி வரை அவர் கலந்து கொள்ள இருந்த நிகழ்ச்சிகள் யாவும் ரத்துச் செய்யப்பட்டுவிட்டன. எதிர்வரும் நான்காம் திகதி வரையான 14 நாள்கள் அவர் ஓய்வெடுத்துக் கொள்கிறார்!

ஜனாதிபதி சந்திரிகா விடுமுறையைக் கழிப்பதற்காக மாலைதீவு சென்றுவிட்டார் என்பது பிந்திய தகவல். அதேபோன்று அரசாங்கத்துக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையிலான இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தை காலவரையறை இன்றி ஒத்திவைக்கப்பட்டுவிட்டது என்பதும் பிந்திய தகவல்.

நாட்டு நிர்வாகத்தினைப் புறக்கணித்து தமது மகள் விடுமுறையைக் கழிப்பது குறித்துத் தாயார்—பிரதமர்—சிறிமாவோ பண்டாரநாயக்காவும் அதிருப்தி தெரிவித்திருந்தார்.

திருமதி சந்திரிகா குமாரதுங்கா அரசியலுக்குப் புதியவர். நாட்டு நிர்வாகத்தில் அனுபவம் மிகமிகக் குறைவு. எனினும் மக்கள் அபிமானத்தாலும், பதினேழு வருடத் தொடர் ஆட்சியில் தென்னிலங்கை மக்களுக்கு உண்டான வெறுப்பினாலும் சந்திரிகா நாட்டின் தலைவராகிவிட்டார்.

மக்கள் தமது அமோக ஆதரவைத் தெரிவித்து அவரை ஜனாதிபதியாகத் தெரிவு செய்து விட்டார்கள். அவர் மீது பெருமளவு நம்பிக்கை வைத்து, மிகப் பெரிதாக அவரிடம் இருந்து எதிர்பார்த்து அரசியலின் உச்சாணிக்கு ஏற்றிவிட்டார்கள்.

ஆனால் கடந்த நான்கு மாதங்களிலும் தாம் நாட்டின் தலைவி என்பதனை மறந்து, குழந்தைப் பிள்ளைத்தனமாக சந்திரிகா பல சந்தர்ப்பங்களில் நடந்து கொண்டிருக்கிறார். அவற்றில் பத்தோடு பதினொன்றாக இதனையும் சேர்த்துக் கொள்ளலாம்!

சென்ற தடவை சிங்கப்பூர் சென்று வந்தது குறித்து கண்டனமும், சர்ச்சையும் எழுப்பப்பட்டபோது, எனது உடல்நலன் கருதி இரண்டொரு நாள் ஓய்வு எடுத்துக்கொள்ளும் உரிமை எனக்கில்லையா? — என்று கேட்டவர் சந்திரிகா. ஆகையால் இம்முறையும் அதே கேள்வியைக் கேட்பார் என்று எதிர்பார்க்கலாம். அந்த உரிமையும் அவருக்கு உண்டு!

ஆனால் நாட்டு மக்களுக்குச் செய்யவேண்டிய கடமையைப் பொறுப்புணர்வு இன்றித் தட்டிக்கழிக்கும் வகையில் அல்லது பிரச்சினைகளுக்குப் பயந்து ஒழித்தோடுவது என்பது ஒரு நாட்டின் தலைவரது பலவகையான பலவீனங்களைப் பிரதிபலிப்பதாகவே கொள்ளப்படும்.

நாட்டை தீயாகப் பற்றி எரித்துக் கொண்டிருக்கும் இனப்பிரச்சினை விரைவாகத் தீர்ப்பதில் அக்கறை உள்ளவராகக் காட்டிக் கொள்ளும் ஜனாதிபதி இரண்டாம் கட்டப் பேச்சுவார்த்தையை இப்படியே பின்தள்ளிக்கொண்டு போவது அவர் மீது நம்பிக்கை இன்மையையே உண்டாக்கும்.

ஐயர் வரும்வரையும் அமாவாசை காத்திருக்க வேண்டும் என்ற போக்கில் செயற்படுவது மெத்தவும் தான்தோன்றித் தனமானதாகும்.

பேச்சுவார்த்தையில் தாம் கலந்துகொள்வதில்லை என்பதால், தாம் விடுமுறையில் செல்வதற்கு முன்னர் பேச்சுவார்த்தைகளுக்கான ஏற்பாடுகளைச் செய்து உரிய பணிப்புரைகளை விடுத்திருக்கலாம். அப்படியும் செய்யவில்லை.

அடிண்மனை எரியும் போது பிடில் வாசிக்கும் நவீன நீரோ மன்னனாக சந்திரிகா விளங்கும் வரை இனப்பிரச்சினைக்குத்தீர்வு கிடைக்கும் என்பது சந்தேகத்துக்கு உரியதாகும்!

தீர்வுக்கு உருப்படியான திட்டம் அரசிடம் இல்லை

தாமதத்துக்கு இதுவே காரணம் என்கிறார் ரணில்

கொழும்பு, டிச. 28

''இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு காண்பதற்கான திடமான கொள்கையோ அல்லது யோசனையோ அரசாங்கத்திடம் இருப்பதாக தெரியவில்லை. சமாதானப் பேச்சுவார்த்தைகளை தொடர்ந்து முன்னெடுப்பதில் அரசாங்கம் காட்டும் தாமதத்துக்கு இதுவே காரணம்''

இப்படிக் கூறுகிறார் எதிர்கட்சித் தலைவர் திரு. ரணில் விக்கிரமசிங்க.

''இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதாகக் கூறியே பொதுமக்கள் ஐக்கிய முன்னணி மக்களிடம் வாக்குக்களை கேட்டது. மக்களும் இதற்கான ஆணையை வழங்கி பெரும்பாலான வாக்குக்களை அளித்தனர்.

எனவே தீர்வு யோசனையை பகிரங்கமாக அறிவித்து அரசாங்கம் தாமதமின்றிப் பேச்சுவார்த்தையை முன்னெடுக்க வேண்டும். இது அரசின் தவிர்க்க முடியாத கடமையாகும்.

அரசு தீர்வு யோசனையை முன்வைத்த பின்னர், அது எவ்வாறு அமைந்திருக்கிறது என்பதை தெரிந்து கொண்டதன் பின்னர் ஐ.தே.க. வின் நிலைப்பாடு குறித்து தெரிவிக்கப்படும்.

கடந்த 17 வருட கால ஆட்சியில் இனப்பிரச்சினைக்கு தீர்வு காண ஐக்கிய தேசியக் கட்சி தவறி விட்டதாக தெரிவிக்கப்படும் குற்றச்சாட்டை நான் நிராகரிக்கிறேன்.

சிங்களம், மட்டும் சட்டம், ஒரு இனத்தின் நாடு என்ற சிந்தனை இருந்த நாட்டில், பல இனங்களையும், பல மதங்களையும் சேர்ந்தவர்கள் வாழும் நாடு என்ற சிந்தனையை உருவாக்கியவர்கள் நாங்களே.

தமிழ் மொழியையும் அரசகரும மொழியாக்கியதும் நாங்களே. அதிகாரப் பரவலாக்கலுக்கு முக்கியத்துவம் கொடுத்து மாகாண சபைகளை உருவாக்கியதும் ஐக்கிய தேசியக் கட்சி அரசே — இப்படி ரணில் விக்கிரமசிங்க கூறினார்,

(ஐ—3)

தமிழரை சட்டவிரோதமாக அனுப்பிய பயண முகவர் நால்வர் ஹோலண்டில் கைது!

ஹோலண்ட் உட்பட மேற்கு நாடுகள் சிலவற்றுக்கு இலங்கைத் தமிழர்களை சட்டவிரோதமாக அனுப்பி வந்த கோஷ்டி ஒன்றை சேர்ந்த நெதர்லாந்து நாட்டவர் நால்வர் ஹோலண்ட் பொலீஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இருந்து ஒன்றரை லட்சம் ரூபா கமிஷனாகப் பெற்று ஹோலண்டுக்கு தமிழர்களை அழைத்து வரும் கோஷ்டி ஒன்றைப்பற்றி தகவல் கிடைத்ததை அடுத்து ரகசிய விசாரணை நடத்திய ஹோலண்ட் பொலீஸார் இந்த நால்வரையும் கைது செய்துள்ளனர்.

அண்மைக் காலத்தில் இது போன்ற மோசடிகளில் ஈடுபட்ட 7 பேர் இது வரை கைது செய்யப்பட்டிருப்பதாக ஹோலண்ட் பொலீஸார் தெரிவித்தனர். (ஐ—3)

கற்பழிப்பு குற்றத்துக்கு 20 வருடக் கடுழியச் சிறை!

விரைவில் சட்டத்திருத்தம்

கொழும்பு, டிச. 29

கற்பழிப்பு சம்பவங்கள் மற்றும் பெண்கள் மீதான வன்செயல்கள் போன்ற குற்றங்களுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கும் வகையில் குற்றவியல் சட்டக்கோவை விரைவில் திருத்தியமைக்கப்பட விருக்கிறது.

நாடாளுமன்றத்தில் விரைவில் சமர்பிக்கப்பட விருக்கும் திருத்தச்சட்ட மூலத்தின் படி கற்பழிப்பு குற்றவாளிகளுக்கு 5வருடங்களுக்கு குறையாமலும் 20 வருடங்களுக்கு மேற்படாமலும் கடுழியச் சிறைத் தண்டனை விதிப்பதுடன் 10 ஆயிரம் ரூபாவுக்கு குறையாத அபராதமும் விதிக்கப்படும்.

இதைத்தவிர குற்றவாளி நீதிமன்றத்தால் தீர்மானிக்கப்படும் ஒரு தொகை பணத்தை பாதிக்கப்பட்ட பெண்ணுக்கு நட்ட ஈடாக வழங்கவேண்டும்.

நட்டஈட்டைச் செலுத்தத் தவறும்பட்சத்தில் குற்றவாளியாகக் காணப்பட்டவர் கூடுதல் தண்டனை அனுபவிக்க வேண்டும்.

தற்போதுள்ள சட்டங்களின் படி இந்த குற்றச் செயலை புரிந்தவர்கள் ஒத்திவைப்பு சிறைத்தண்டனையுடன் தப்பித்துக் கொள்ளமுடியும். இதன் காரணமாகவே கற்பழிப்புச் சம்பவங்கள் மற்றும் பெண்கள் மீதான வன்செயல்கள் அதிகரித்து வந்தன. (ஐ—3)

சத்திர சிகிச்சை செய்வதற்காக

அனுராவை மயக்குவதற்கு உதவிய எகிப்திய அழகி!

அதனால் முடமாகாமல் தப்பினார்

கொழும்பு, டிச. 29

அண்மையில் எகிப்து நாட்டில் விபத்துக்குள்ளான திரு. அனுரா பண்டாரநாயக்காவின் கால் அந்நாட்டு அழகியான பெண் டாக்டர் ஒருவரின் சாதுரியத்தால் சத்திரசிகிச்சை மூலம் முடமாகாமல் காப்பாற்றப்பட்டது என்ற தகவல் தற்போது வெளியாகியுள்ளது.

எகிப்தில் உள்ள அஸ்வான் அணைக்கட்டைப் பார்வையிடச் சென்ற சமயம் அனுரா பண்டாரநாயக்கா விபத்துக்குள்ளாகி தனது ஒரு காலில் படுகாயமடைந்தார் என்பது தெரிந்ததே.

காலில் படுகாயமடைந்த அனுரா அங்குள்ள ஆஸ்பத்திரி ஒன்றில் அனுமதிக்கப்பட்டார்.

அவரது கால் முடமாகாமல் இருக்க உடனடியாகவே அவருக்கு அவசர சத்திர சிகிச்சை மேற்கொள்ளப்பட வேண்டி இருந்தது.

ஆனால் சத்திர சிகிச்சை செய்வதற்கு முன் மயக்க மருந்தை ஊசி மூலம் உடலில் ஏற்றுவதற்கு அனுரா மறுத்துவிட்டார்.

''எனது ஆருயிர் நண்பரான நந்தா எல்லாவெல என்பவருக்கு ஒருசமயம் சத்திரசிகிச்சைக்காக மயக்க மருந்து ஏற்றப்பட்டது. சத்திர சிகிச்சை முடிந்தும் அவர் மயக்கம் தெளிந்து எழவில்லை. அந்த நிலை எனக்கும் ஏற்பட இடமளிக்கக்கூடாது'' என்று தனது மறுப்புக்கு காரணம் கூறினார் அனுரா.

மயக்க மருந்தை ஏற்ற அவரைச் சம்மதிக்கச் செய்ய அங்கிருந்த பலர் முயன்றபோதும் அவர் வேண்டாம் என்று அடியோடு மறுத்துவிட்டார்.

இறுதியில் அந்த ஆஸ்பத்திரியின் மயக்கமருந்து டாக்டரான எகிப்திய பெண் அழகி ஒருவர் அனுராவுடன் பேசி வெகுசாமர்த்தியமாக அவரை மயக்க மருந்து ஏற்றச் சம்மதிக்க வைத்தார்.

அந்தப் பெண்ணின் திறமையால் அதன்பின் அவருக்குச் சத்திர சிகிச்சை நடந்தது. படுகாயமடைந்த அவரது கால் முடமாகாமல் குணப்படுத்தப்பட்டது. (ஐ—3)

நிர்வாக சேவைப் பரீட்சை திகதி குறித்து முடிவில்லை

பரீட்சை ஆணையாளர் அறிவிப்பு

யாழ்ப்பாணம், டிச. 29

இலங்கை நிர்வாக சேவைக்கு ஆட்களைச் சேர்பதற்கான போட்டிப்பரீட்சை நடைபெறும் திகதி குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை என்று பரீட்சை ஆணையாளர் நாயகம் ஆர்தர் வெதமுல்ல அறிவித்துள்ளார்.

யாழ். மேலதிக அரச அதிபர் திருமதி. ப. திலகநாயகத்துக்கு பரீட்சை ஆணையாளர் நாயகம் இது குறித்து நேற்று செய்தி அனுப்பியுள்ளார்.

இப்பரீட்சை நாளை கொழும்பில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டதால் பரீட்சார்த்திகள் மத்தியில் குழப்பம் நிலவியது தெரிந்ததே. (ஐ—3)

பரீட்சை பெறுபேறு

யாழ்ப்பாணம், டிச. 29

இலங்கை நூலக சங்கத்தின் 1990ஆம், 1993ஆம் ஆண்டு மாணவர்களுக்கான இறுதிப் பரீட்சைப் பெறுபேறுகள் அண்மையில் வெளியாகியுள்ளன.

1989ஆம் ஆண்டிற்குப் பின் இடம்பெற்ற நூலக சேவைக்கான பரீட்சையும் இதுவே.

1990ஆம் ஆண்டு பதிவு செய்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் ஒரு சதவீதத்திற்கும் குறைவானவர்களே சித்தியடைந்துள்ளனர். 1993 ஆம் ஆண்டு பதிவு செய்து பரீட்சைக்கு தோற்றிய மாணவர்களில் 80 சதவீதத்திற்கும் மேற்பட்டோர் சித்தியடைந்துள்ளனர், பெரும்பாலானோர் அதிவிசேட சித்தி பெற்றுள்ளனர்.

இரு தொகுதி மாணவர்களுக்கும் இப்பரீட்சை ஒன்றாகவே நடைபெற்றது.

பரீட்சை முடிவுகளை மீள் பரிசீலனை செய்வதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் அனுமதியளிக்கவில்லை என சித்தியடையாத மாணவர்களால் தெரிவிக்கப்பட்டது.

வீதியை திருத்த வேண்டுகோள்

யாழ்ப்பாணம், டிச. 29

நல்லூர் கொண்டலடி வீதி கடந்த 30 வருடங்களாக திருத்தப்படாததினால் வீதி போக்குவரத்து செய்யமுடியாத அளவுக்கு குன்றும் குழியுமாக காணப்படுகின்றது.

இவ் வீதியை புனரமைத்து தருமாறு கொண்டலடி ஞானவைரவர் சனசமூக நிலையத்தினர் யாழ். மாநகராட்சி மன்றத்தைக் கேட்டுள்ளனர்.

விண்ணப்பங்கள் இடைநிறுத்தம்

கொழும்புத்துறை, டிச. 29

யாழ். செயலக மேலதிக மாவட்டப் பதிவாளர் காரியாலயத்தில் காலம் கடந்த பிறப்பு, இறப்புப் பதிவு மற்றும் மாற்றங்கள் தொடர்பான விண்ணப்பங்கள் ஜனவரி 2 ஆம் திகதி வரை ஏற்றுக் கொள்வது இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளது என மேலதிக மாவட்டப் பதிவாளர் திரு. அ. பொன்னம்பலம் அறிவித்துள்ளார். (சு—30)

உலகில் இன்னலுறும் 12 லட்சம் ஈழத்தமிழருக்கு சர்வதேச அகதி அந்தஸ்து வழங்கப்பட வேண்டும்

புலம் பெயர்ந்த தமிழர் நல மாநாட்டில் தீர்மானம்

புலம் பெர்ந்த தமிழர் நல மாநாடு கடந்த 18 ஆம் திகதி திருச்சியில் நடைபெற்றது.

உலகெங்கும் இன்னற்படும் ஈழத்தமிழ் அகதிகளுக்கு சர்வதேச அகதிகள் அந்தஸ்தை பெற்றுக் கொடுப்பது தொடர்பாகவும் மற்றும் தமிழக அகதி முகாம்களின் நிலைமைகள், தஞ்சாவூர் தமிழாராய்ச்சி மாநாடு போன்றவை தொடர்பாகவும் அந்த மாநாட்டில் தீர்மானங்கள் பல எடுக்கப்பட்டன.

அந்த மாநாட்டில் எடுக்கப்பட்ட தீர்மானங்கள் இங்கேதொகுத்துத் தரப்பட்டுள்ளன.

எட்டாவது உலகத் தமிழ் மாநாடு நடைபெற இருக்கும் இந் நேரத்தில் சிங்கள பேரினவாதத்தின் விளைவாக எல்லாவற்றையும் இழந்து உயிருக்கும் சுதந்திரத்திற்கும் பாதுகாப்பின்றி இலங்கைக்குள்ளும், தமிழகத்திலும், மேலை நாடுகளிலும் தஞ்சம் புகுந்துள்ள சுமார் 12 லட்சத்திற்கும் மேலான ஈழத் தமிழர்களின் அவல நிலையின்பால் தமிழ் மக்களின் கவனத்தை இம் மாநாடு ஈர்க்கிறது. சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்டுள்ள அகதிகளுக்கான உரிமைகளைப் பெற்றுத் தருகிற கடமையின்பால் கவனத்தைத் திருப்ப வேண்டுமென தமிழ் மக்களை இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

பல்வேறு ஓட்டைகள் உள்ள தாயினும் அகதிகளின் உரிமைகளை வரையறுக்கும் சர்வதேச அளவிலான கருவிகளாக விளங்குபவை (அ) அகதிகள் நிலை தொடர்பான ஐ. நா. அவையின் 1954ஆம் ஆண்டு நகல் உடன்பாடு. (ஆ) அகதிகள் நிலை தொடர்பான 1967ஆம் ஆண்டு விருப்ப ஒப்பந்தம் ஆகும். இவற்றில் உலகெங்கிலும் உள்ள 106 நாடுகள் கையெழத்திட்டுள்ள நிலையில் இந்திய அரசு இது வரை கையெழுத்திடாதிருப்பதை இம் மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. உடனடியாக இவ்விரண்டு அறிக்கைகளிலும் கையெழுத்திட வேண்டுமென மத்திய அரசை இம் மாநாடு வற்புறுத்துகிறது.

சிறப்புமுகாம் சித்திரவதை

ஈழ அகதிகளுக்காக அமைக்கப்பட்டுள்ள ''சிறப்பு முகாம்கள்'' என அழைக்கப்படும் சித்திரவதை முகாம்களில் அடைபட்டுள்ளவர்களுக்கு அடிப்படையான மனித உரிமைகள் பலவும் மறுக்கப்பட்டுள்ளன. தனிக் கொட்டில்களில் அடைத்தல், உறவினர்களைச் சந்திக்க நிறைகளைக் காட்டிலும் மோசமான கெடுபிடிகள், சரியான மருத்துவ வசதிகள் இன்மை போன்றவற்றால் இவர்கள் அல்லலுறுகின்றனர். நாட்டுக்கு திரும்புவதாக ஒத்துக்கொண்டால் மட்டுமே இவர்களை வெளியே விடுவதாக அதிகாரிகள் நிபந்தனை விதிக்கின்றனர். வேறு சிலர் சொந்தச் செலவில் தாயகம் திரும்ப அனுமதி கோரியும் அனுமதி மறுக்கப்பட்டுள்ளது. சிறப்பு முகாம்களில் நடைபெறும் இத்தகைய மனித உரிமை மீறல்களை இம் மாநாடு வன்வையாகக் கண்டிக்கிறது. சிறப்பு முகாம்களை உடனடியாக ஒழித்துக்கட்டி அவற்றில் உள்ளவர்களைச் சாதாரண முகாம்களுக்கு அனுப்ப வேண்டும்,

தமிழகத்தி[illegible] 120 முகாம்களில் சுமார் எழுபது ஆயிரம் ஈழத் தமிழ் அகதிகள் உள்ளனர். மேற்கூரை, கழிப்பிட வசதி, நீர் வசதி முதலியன இவற்றில் இல்லை. ஒழுங்கான மருத்துவ வசதிகளும் அளிக்கப்படுவதுமில்லை. சலுகை விலை அரிசியின் அளவும், தரமும் மிகக் குறைவு. முகாம்களின் நிலைகள் சீர்திருத்தப்பட்டு அடிப்படை வசதிகள் செய்து தர வேண்டும்.

குற்றப்பரம்பரை

முகாம்களுக்குச் சென்று தொண்டு நிறுவனங்கள் உதவி புரிவதைத் தடைசெய்தும் முகாம்களில் இருப்பவர்கள் காலை 8மணிக்கு முன்னதாக வெளியேறக் கூடாது எனவும் மாலை 6மணிக்கு முன்னதாக வந்துவிட வேண்டுமெனவும் தமிழக அரசு சமீபத்தில் உத்தரவிட்டுள்ளது. இதன் மூலம் தமிழ் அகதிகள் குற்றப்பரம்பரையினராக கணிக்கப்படுவதையும் வெளியில் சென்று கூலி வேலை செய்யும் வாய்ப்பு தடுக்கப்படுவதையும் இம் மாநாடு வருத்தத்துடன் சுட்டிக்காட்டுகிறது. அகதிகளின் மனித கண்ணியத்தை இழிவு செய்யும் இந்த உத்தரவை உடனடியாக ரத்து செய்ய வேண்டுமென தமிழக அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

பொலீஸ் கெடுபிடி, பெண்கள் மீதான பாலியல் வன்முறை உட்பட முகாம்களில் நடைபெறும் பல்வேறுவிதமான மனித உரிமை மீறல்களில் கவனம் செலுத்த வேண்டுமென மனித உரிமை இயக்கங்களை இம்மாநாடு கேட்டுக்கொள்கிறது.

குற்றவாளிகள் என சந்தேகிக்கப்படும் ஈழ அகதிகள் மீது இந்திய தண்டனைச் சட்டம், குற்றவியல் சட்டம் ஆகியவற்றைப் பயன்படுத்தாமல் ''தடா''சட்டத்தைத் [illegible] படுத்தி அவர்களது உரிமை [illegible] இம்மாநாடு வன்மையாக கண்டிக்கிறது. ''தடா''சட்டத்தை நீக்கி வழக்கமான சட்டப்பிரிவுகளின் கீழ் அவர்கள் விசாரிக்கப்பட வேண்டும்.

ஈழ அகதிகளிடம் இருந்து கைப்பற்றப்பட்ட படகுகள் தகுந்த பராமரிப்பு இன்றி சுங்கத்துறையின் பொறுப்பில் உள்ளன. அவற்றை சரியாகப் பராமரிக்க வேண்டுமெனவும் விரைவாக விசாரணையை முடித்து உரியவர்களிடம் அவற்றைத் திருப்பித்தர வேண்டும். எனவும் இம் மாநாடு வற்புறுத்துகிறது.

முகாம்களிலுள்ள அகதிகளை அவர்களது விருப்பத்திற்கு மாறாக இலங்கைக்கு அனுப்புவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. தாயகத்தில் நிலைமைகள் சரியாய் இல்லாததை ஏற்றுக் கொள்ளும் அகதிகளுக்கான ஐ. நா. உயர் ஆணையம், ஈழத் தமிழ் அகதிகளை திருப்பி அனுப்பும் விசயத்தில் பொறுப்புடன் செயல்படாததை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. தாயகத்து நிலைமைகளை முகாம்களில் உள்ளவர்களுக்கு விரிவாக விளக்க வேண்டும் எனவும் இந்திய அரசும் மாநில அரசும் அவர்களை வற்புறுத்தி வெளியேற்றா வண்ணம் கவனிக்க வேண்டும். எனவும் இம்மாநாடு வற்புறுத்துகிறது.

ஈழ அகதிகளுக்கு நமது கல்வி நிலையங்களில் கல்வி உரிமைகள் மறுக்கப்படுவதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. கல்லூரிகளிலும் மருத்துவ/தொழில் கல்லூரிகளிலும் ஈழ அகதிகளுக்கு இட ஒதுக்கீடு செய்ய வேண்டும்.

சுவாமி மீதும் கண்டனம்

விடுதலைப் புலிகளைப் [illegible] பீதியூட்டும் வகையில் தொடர்ந்து பேசி ஈழத் தமிழ் அகதிகள் இம்மண்ணில் வாழ இயலா வண்ணம் செய்யும் சுப்பிரமணியசுவாமியை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது.

முகாம்களில் மனித உரிமை மீறப்படுதல்கள் தொடர்பான புகார்களை விசாரிப்பதில் இன்னும் மேலதிகமான அக்கறை செலுத்த வேண்டுமென இந்திய மனித உரிமை ஆணையத்தை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது.

மாநாட்டில் கதவடைப்பு

நடைபெற இருக்கும் எட்டாவது உலகத் தமிழ் மாநாட்டில் யாழ்ப்பாணத்திலிருந்துவரும் தமிழறிஞர்களுக்குப் பாதுகாப்புக் காரணங்களைக்காட்டி அனுமதி மறுப்பதை இம்மாநாடு வன்மையாகக் கண்டிக்கிறது. தமிழகத்திற்கு அடுத்தபடியாக அதிகத்தமிழர்கள் வசிக்கும் நாடு இலங்கை. தமிழ் வளர்ச்சியிலும் தமிழ் பண்பாட்டு ஆக்கத்திலும் ஈழத்திற்கு மிக முக்கிய பங்குண்டு. ஈழ அறிஞர்களை ஒதுக்கிவிட்டு நடத்தப்படும் உலகத்தமிழ்மாநாடு கேலிக்கூத்தாகவே இருக்க முடியும் என்பதை இம்மாநாடு சுட்டிக்காட்டுகிறது. ஈழ அறிஞர்கள் வருவதற்கான அனுமதியை உடனே வழங்க வேண்டுமென அரசை இம்மாநாடு வற்புறுத்துகிறது.

புலம்பெயர்ந்து வாழும் தமிழர்களின் இலக்கிய முயற்சிகளுக்கான தனி ஆய்வு அமர்வு ஒன்று எட்டாம் உலகத்தமிழ் மாநாட்டில் இடம் பெறாததற்கு இம்மாநாடு வருத்தம் தெரிவிக்கிறது. எதிர்காலத்தில் தமிழ் மொழிப் பாடத்திட்டங்களில் புலம்பெயர் இலக்கியங்களுக்கு உரிய பங்கு அளிக்கவேண்டுமென தமிழக அரசையும், கல்வியாளர்களையும் இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது.

ஈழ அகதிகள் வெளிநாடு செல்ல விரும்பினால் அவர்களுக்கு உரிய பயண ஆவணங்கள் அளிப்பதற்கு ஆவன செய்யவேண்டும்.

மலையக மக்களுக்கு மறுவாழ்வு

1964ஆம்ஆண்டு இலங்கை-இந்திய உடன்படிக்கைப்படி இந்தியாவிற்கு நாடு திரும்பியுள்ள மலையகத் தமிழ் மக்களுக்கு போதுமான மறுவாழ்வு உதவிகள் வழங்கப்படாமல் அனாதைகளாக்கப்பட்டுள்ளனர். அவர்களுக்கு குடியிருக்க வீடு, வேலை வாய்ப்பு, விடு கட்ட மனைகள், வீட்டுக்கடன்கள் போன்றவை முறையாக வழங்கப்படாமல் இடைத்தரகர்களால் ஏமாற்றப்படும் இழிநிலைக்கு தள்ளப்பட்டுள்ளனர். அவர்களுக்கு இலங்கை குடியுரிமை வழங்கி ஏனையவர்களைப் போல சகல உரிமைகளுடன் வாழ வழிவகை செய்யப்பட வேண்டும் என மைய அரசு இலங்கை அரசைக் கோர வேண்டும்.

ஈழ அகதிகள் என்றாலே பயங்கரவாதிகள், குற்றவாளிகள், கொள்ளையர்கள் என்பது போன்ற ஒரு பிம்பத்தைக் கட்டமைக்க வேண்டாமென அரசியல் வாதிகளையும் பத்திரிகைகளையும் இம் மாநாடு கேட்டுக்கொள்கிறது. அரசியல் லாபங்களுக்காக மனித உரிமைகள் பணயமாக்கப்படுவதற்கு இம் மாநாடு கவலை தெரிவிக்கிறது.

ஈழத்தமிழ் அகதிகளின் பிரச்சினையை மனிதாபிமானக் கண்ணோட்டத்தில் அணுகி அவர்களது உரிமைகளுக்காக போராட வேண்டுமென தமிழக அரசியல் கட்சிகளுக்கு இம்மாநாடு அறைகூவல் விடுகிறது.

புலம் பெயர்ந்து வாழ்ந்து அல்லலுறும் ஈழத்தமிழர்களின் உரிமைகளின் பால் கவனம் செலுத்த வேண்டுமெனவும் அவர்களது உரிமைகளுக்காகக் குரல் கொடுக்க வேண்டுமெனவும் எட்டாம் உலகத் தமிழ் மாநாட்டுப் பிரதிநிதிகளை இம்மாநாடு கேட்டுக் கொள்கிறது. ★

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அரியாலை ஐக்கிய கழகம்
நடத்தும்
அமரர் E.K. குமரையா
ஞாபகார்த்த
உதைபந்தாட்ட சுற்றுப் போட்டியின்
இறுதிப் போட்டிகள்

தலைவர் திரு. பொ. பஞ்சலிங்கம் தலைமையில் அரியாலை ச.ச. நிலைய மைதானத்தில் நடைபெறும்.

பிரதம விருந்தினர்:
திரு. C. பத்மநாதன் (திட்டப்பணிப்பாளர்)

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. V. T. சிவலிங்கம்
(நிருவாக உத்தியோகத்தர்-I. C. R. C)
திரு N.குகதாசன் (தலைவர்-அரியாலை ச.ச.நி)

காலம்: 29-12-1994 வியாழன்

2-30 பிற்பகல்
பொற்பதி விக. எதிர் கலைவாணி விக.

4 00 பிற்பகல்
பாடும் மீன் "A" விக. எதிர் சென் அன்ரனீஸ் விக.

அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பும் நடைபெறும்.

போட்டி பொறுப்பாளர்,
C. சூரியகுமார்.
அ. ஐ. க.

[சி-10114]

மரண அறிவித்தல்கள்

திருமதி நாகரத்தினம் மகேஸ்வரி

வீமன்காமம் தெல்லிப்பளையைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், முருகேசு நாகரத்தினத்தின் அன்பு மனைவியுமாகிய, மகேஸ்வரி 28 12—1994 நேற்று காலமாகிவிட்டார்.

இவர் கமலாம்பிகை, காலஞ்சென்ற சரவணபவான், விமலாம்பிகை, சுகுணவதனி (லண்டன்), உஷா தேவி, அம்பிகைபாகன் (லண்டன்), சிறிகணேஸ் (ஆசிரியர் வயாவிளான் மத்திய மகாவித்தியாலயம்) ஆகியோரின் அன்புத் தாயாரும், யோகானந்தர் (லண்டன்), மஞ்சுளா (லண்டன்), விஜிதா ஆகியோரின் மாமியாரும், ஜெயந்தன், பரன், ராம்ஜி, ரஸ்வினி, கோபிகணேஸ், பவகணேஸ் ஆகியோரின் பேர்த்தியாரும் ஆவார்.

அன்னாரின் ஈமக்கிரியைகள் மானிப்பாய் பிப்பிலி மயானத்தில் நேற்று (28 12—1994) நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் யாவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மு. நாகரத்தினம்
உடுவில். (34418)

வேலாயுதம் இராசா

சுருவிலைச் சேர்ந்தவரும் தற்போது கல்வியங்காட்டில் வசித்து வந்தவருமான வேலாயுதம் இராசா நேற்றுக் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பொன்னம்மாவின் அன்புக் கணவரும், தணிகாசலம், மகாலிங்கம், லலிதாம்பிகை, செல்வராசா, காலஞ்சென்ற யோகராசா ஆகியோரின் அன்புத் தந்தையும்' தயாநிதி, வடிவாம்பிகை, இராஜேந்திரன் காலஞ்சென்ற நாகேஸ்வரி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (29-12-94) முற்பகல் 11 மணியளவில் கல்வியங்காடு இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்;
மகாலிங்கம்
(மகன்)
ஆடியபாதம் வீதி,
கல்வியங்காடு. (34420)

திருமதி மங்கையர்க்கரசி குமாரசாமி
(குமரபுரம் கோப்பாய் தெற்கு)

கொக்குவிலைப் பிறப்பிடமாகக் கொண்டவரும், கோப்பாய் தெற்கை வதிவிடமாகக் கொண்டவருமான குமாரசாமி மங்கையர்க்கரசி நேற்று (28-12-94) பிற்பகல் 2 30 மணிக்கு காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற கந்தையா - பொன்னம்மா தம்பதிகளின் மகளும், காலஞ்சென்ற அப்பலவாணர் குமாரசாமியின் அன்பு மனைவியும், திருமதி நடராஜா இராஜதேவியின் அன்புச் சகோதரியும், வி. நடராஜா (இளைப்பாறிய ஆசிரியர் புலோலி) அவர்களின் அன்பு மைத்துனியும், திருமதி. தி. தனேஸ்வரி (ஆசிரியை யா/ கோப்பாய் ம வித்தியாலயம்), குமாரதாசன் (பிரான்ஸ்), பஞ்சதாசன் (லண்டன்), திருமதி கு. கமலேஸ்வரி, திருமதி வி. நாகேஸ்வரி (ஆசிரியை யா/ முத்துதம்பி வித்தியாலயம்), திருமதி உ. ஆனந்தீஸ்வரி (பிரான்ஸ்), திருமதி வி குமரேஸ்வரி, குகதாசன் (சுவிஸ்), கெங்கேஸ்வரி (கொழும்பு) ஆகியோரின் அன்புத் தாயாரும், Dr சி. திருக்குமாரன் (பாக்கியம் குழந்தைகள் சிகிச்சைநிலையம் K K S வீதி, யாழ்ப்பாணம்), வை. குணாளன் (கிராம அலுவலகர், வித்தகபுரம்), சி விஜயகாந்தன் (மின்சாரப் பகுதி. யாழ். மாநகரசபை), வி. உலகேஸ்வரன் (பிரான்ஸ்), திருமதி கு பத்மா (பிரான்ஸ்), திருமதி ப. இரஞ்சிதேவி (லண்டன்), சி. விஜயநாயகம் (மண்) ஆகியோரின் அன்பு மாமியும், திலீப்குமார், சரண்யா, கௌதமன், தீலீப்அமுதன், அசோக், அர்ச்சுனா, அஜந், துமிந்தன், திவ்யா, சேயோன், லக்சன், கபிலன் ஆகியோரின் அன்புபேத்தியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (29-12-94) நண்பகல் 12 மணிக்கு அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக கோப்பாய் கந்தன்காடு மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். தயவுசெய்து உற்றார், உறவினர், நண்பர்கள் இவ் அறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள், மருமக்கள்
சகோதரி

குமரபுரம்
இருபாலை சந்தி,
கோப்பாய் (34416)

ஜி. சி. ஈ. சாதாரண பரீட்சையில்

தாய்மொழி, கணிதம் சித்தி பெற்றால் ஆசிரிய நியமனம் கிடைக்கும்

கொழும்பு, டிச. 29

ஜி. சி. ஈ. (சாதாரண)பரீட்சையில் தாய்மொழி, கணிதம் ஆகிய பாடங்களில் சித்தியடைவோருக்கும் ஆசிரிய நியமனம் வழங்கப்படலிருப்பதாக கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

எதிர்காலத்தில் இத்தகைய தகுதியுள்ளவர்களுக்கும் ஆசிரிய நியமனம் வழங்க கல்வி அமைச்சு முடிவு செய்துள்ளதாக கொழும்பு பத்திரிகை ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

ஜி. சி ஈ.(உயர்தர)பரீட்சையில் சித்தியடைந்தவர்களுக்கே தற்பொழுது ஆசிரிய நியமனம் வழங்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது. (ஒ-3)

கல்லூரி மாணவரிடையே விஞ்ஞானப் போட்டிகள்

யாழ். விஞ்ஞானச் சங்கம் நடத்தும்

விஞ்ஞான அறிவை மேம்படுத்தும் நோக்குடன் யாழ்ப்பாண விஞ்ஞானச் சங்கம் கல்லூரி மாணவர்களிடையே போட்டிகளை நடத்தவிருக்கிறது.

விஞ்ஞான வினா-விடைப் போட்டியின் முதல் கட்ட எழுத்துப்பரீட்சைகள் அடுத்த மாதம் 7ஆம் திகதி வேம்படி மகளிர், டிறிபேர்க், இராமநாதன், நெல்லியடி ம. வி. ஆகிய கல்லூரிகளில் நடைபெறவிருக்கின்றன.

இந்த எழுத்துப்பரீட்சையில் இருந்து தெரிவாகும் முதல் 10 மாணவர்களுக்கான வினா - விடைப் போட்டி அடுத்தமாதம் 21ஆம் திகதி யாழ். இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும்.

அத்துடன் விஞ்ஞானப் பேச்சுப் போட்டிகளும் அடுத்தமாதம் 21ஆம் திகதி நடைபெறவிருக்கின்றன.

மாணவர்கள் பிந்திய தொழில்நுட்பங்களை அறிய வாய்ப்பளிக்கும் வகையில் ஏப்ரல் மாதத்தில் மருத்துவக் கண்காட்சி ஒன்றையும் இந்த சங்கம் நடத்தவிருக்கிறது. [ஐ-3]

கிராமிய பாசறை நிகழ்வு

யாழ்ப்பாணம், டிச. 29

கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்ச்சி இன்று வியாழக்கிழமை கைதடி நாவற்குழி தெற்கு மறவன் புலோவில் நடைபெறும்.

இந்நிகழ்ச்சியில் காலை 8 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை சிரமதானம் இடம்பெறும். இரவு நிகழ்ச்சியில் யாழ். மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் திரு. இளம்பரிதி உட்படப் பலர் உரை நிகழ்த்துவார்கள். கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும் பயிற்சியாளர்களுக்கான சான்றிதழ், பயிற்சிக் கைநூல் ஆகியனவும் வழங்கப்படும்.

★ ★ ★

கிராமியப் பாசறை மாதாந்த நிகழ்ச்சி நாளை வெள்ளிக்கிழமை சிறுப்பிட்டி பூமகள் சனசமூக நிலையத்தில் பிற்பகல் 3 மணி முதல் நடைபெறும்

இந்நிகழ்ச்சியில் அரசியல் பயிற்சிக் கல்லூரிப் பொறுப்பாளர் திரு மனோ உட்பட பலர் கருத்துரை வழங்குவார்கள் கலை நிகழ்ச்சிகளும் இடம் பெறும். (க)

விளையாட்டு நிகழ்வு

அரியாலை ஐக்கிய கழகம் நடத்திய அமரர் ஈ.கே. குமரையா ஞாபகார்த்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டி இன்று பிற்பகல் 2.30 மணிமுதல் அரியாலை ச.ச.நிலைய மைதானத்தில் நடைபெறும்.

இறுதிப் போட்டியில் பொற்பதி அணியை எதிர்த்து கலைவாணி அணியும், பாடும்மீன் 'ஏ' அணியை எதிர்த்து சென் அன்ரனீஸ் அணியும் மோதவுள்ளன.

பிரதம விருந்தினராக யாழ் திட்டப்பணிப்பாளர் திரு.செ பத்மநாதன் கலந்து கொள்வார். (ஐ)

நாளை

சந்நிதியான் ஆச்சிரம கலை பண்பாட்டுப்பேரவை தொண்டமானாறு ஸ்ரீ செல்வச்சந்நிதி முருகன் ஆலயத்தில் நடத்தும் வாராந்த நிகழ்வுகளில் நாளை வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஸ்ரீ சாரதா சேவாச்சிரம சுவாமி சித்ரூபானந்தா "சரணாகத்" எனும் பொருள் பற்றி உரையாற்றுவார். ஆசிரியர் தி5. இரா. திருஞானசுந்தரம் அறிமுக வுரையை நிகழ்த்துவார்.

36 சைக்கிள்கள் இதுவரை மீட்பு

கடந்த வாரம் சாவகச்சேரி காவல் துறையினரால் கைது செய்யப்பட்ட சைக்கிள் திருடனால் விற்பனை செய்யப்பட்டதாகக் கூறப்படும் 36 சைக்கிள்கள் இதுவரை மீட்கப்பட்டுள்ளன.

இவை சாவகச்சேரி காவல் நிலையத்தில் வைக்கப்பட்டுள்ளன. (ஒ-117)

நினைவஞ்சலி கூட்டம்

யாழ்ப்பாணம், டிச. 29

வடக்கு கிழக்கு மாகாண அரசின் பிரதிச் செயலாளர் மற்றும் பல பதவிகளை வகித்த சி.சடாட்சர சண்முகதாஸின் 31ஆம் நாள் நினைவஞ்சலிக் கூட்டம் நாளை வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு யாழ் இந்துக் கல்லூரி குமாரசுவாமி மண்டபத்தில் நடைபெறும்.

பன்முகப்..

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

என்று எதிர்பார்க்கப்படுகிறது

இதேவேளை—

அந்தந்தப் பகுதி அபிவிருத்தி திட்டங்கள் குறித்த விவரங்களை ஜனவரி 6 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்புமாறு யாழ். செயலகத் திட்டமிடல் பகுதி பிரதேச செயலாளர்களைக் கேட்டுள்ளது [அ-3]

கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், டிச. 29

வவுனியா கல்வியற் கல்லூரியில் தற்சமயம் கல்வியயின்றுகொண்டிருக்கும் மாணவர்கள் அனைவரையும் நாளை வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பு நடுவப் பணியகத்துக்கு (குளப்பிட்டிச் சந்தி) சமுகம் தருமாறு விடுதலைப் புலிகள் மாணவர் அமைப்பினர் கேட்டுள்ளனர். (ஒ)

காரைநகரில் ஷெல், பீரங்கி தாக்குதல்

சுழிபுரம், டிச. 29

காரைநகர் முகாமில் இருந்தும் கடற்பகுதியில் இருந்தும் நேற்று நண்பகல் ஷெல் மற்றும் பீரங்கித் தாக்குதல்கள் நடத்தப்பட்டன.

தொடர்ச்சியாக ஏவப்பட்ட ஷெல் குண்டுகளும் பீரங்கிக் குண்டுகளும் பொன்னாலை, திருவடிநிலைப் பகுதிகளில் பெரும் சத்தத்துடன் விழுந்து வெடித்தன.

இதேவேளை விமானம் ஒன்று தாழப் பறந்து கடற்கரையோரப் பகுதிகளை நோட்டமிட்டுச் சென்றது. (ஒ-28)

ஐ. தே. கட்சியின்...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

யங்களுக்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவற்றில் 66 கேள்விப் பத்திரங்கள், 33 காணி விநியோகங்கள், 70 நியமனங்கள் எஞ்சிய 306 விவகாரங்களும் 11 பிரிவுகளுக்குள் அடங்குகின்றன.

அங்கீகாரம் அளிக்கப்பட்ட 66 கேள்விப் பத்திரங்களின் செலவுத் தொகை மட்டும் 541 கோடி 62 லட்சத்து 8 ஆயிரம் ரூபாவாகும்.

நாடாளுமன்றம் கலைக்கப்பட்ட பின்னர் காபந்து அமைச்சரவை ஒன்றினால் இவ்வளவு பெரும் தொகை கேள்விப் பத்திரங்கள் அனுமதிக்கப்பட்டது இதுவேமுதற் தடவை என்று தற்போதைய அமைச்சரவையின் உறுப்பினர் குறிப்பிட்டார்.

மேற்படி 66 கேள்விப் பத்திர விவகாரம் உட்பட சம்பந்தப்பட்ட இரு கூட்டங்களிலும் அங்கீகரிக்கப்பட்ட பல விடயங்களை ரத்துச் செய்ய புதிய அரசு தீர்மானித்திருப்பது குறிப்பிடத்தக்கது.

காபந்து அரசின் கடைசி இரு அமைச்சரவைக் கூட்டங்களிலும் கேள்விப் பத்திர விதிமுறைகள் முற்றாகப் புறக்கணிக்கப்பட்டதாகவும்—

பல ஊழல்கள் இடம்பெற்றதாகவும் கடந்தவாரம் ரூபவாஹினிப் பேட்டியில்போது ஜனாதிபதி சந்திரிகா குறிப்பிட்டது தெரிந்ததே.

ஐ தே. கட்சியில் ரணில் உட்பட அனைவரது கைகளும் அழுக்குப்படிந்தவைகளே என்றும் அவர் குற்றஞ்சாட்டினார். (உ-10)

கேந்திர..

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

காக புதிய உளவு அறியும் அணியை புலிகள் அனுப்பியுள்ளனர்.

கடந்த செவ்வாய்க்கிழமை மற்றொரு உளவு அறியும் அணி இதே பகுதிக்கு அருகே நடமாடியுள்ளது.

வவுனியாவுக்கு மேற்கே பூவரசங்குளம் பகுதியில் உள்ள முன்னணி நிலைகளுக்கு அருகே புலிகளால் புதிதாக அமைக்கப்பட்ட கண்காணிப்பு நிலையை, ரோந்து சென்ற படையினர் அழித்துள்ளனர்.

காரைநகர் கடற்படை முகாம் மீதும் கடந்த வாரம் மோட்டர் தாக்குதல் இடம் பெற்றுள்ளது.

— இவ்வாறு அந்தப் பத்திரிகை தெரிவித்துள்ளது. (உ)

மாதாந்த நிவாரண உதவி பணமாக வழங்கப்படுகிறது

திருகோணமலை, டிச. 29

திருகோணமலை பட்டண பிரதேச செயலாளர் பிரிவில் கடந்த கால வன்செயல் சம்பவங்களால் பாதிக்கப்பட்டு இடம் பெயர்ந்த 3,200 குடும்பங்களுக்கான மாதாந்த நிவாரணக் கொடுப்பனவுகள் அரசின் புதிய திட்டப் பிரகாரம் ரொக்கப்பணமாக பிரதேச செயலகத்தின் மூலம் வழங்கப்படுகின்றன.

இந்த ஏற்பாட்டின் பிரகாரம் 5 பேருக்கு மேற்பட்ட குடும்பத்துக்கு 1,260 ரூபாவும், 4 பேர் கொண்ட குடும்பத்துக்கு 1,006 ரூபாவும், 3 பேர் கொண்ட குடும்பத்துக்கு 840 ரூபாவும், 2 பேர் கொண்ட குடும்பத்துக்கு 616 ரூபாவும், தனிநபர் ஒருவருக்கு 336 ரூபாவும் உலர் உணவு நிவாரண உதவியாக வழங்கப்படுகிறது. (க)

சக்தி மிக்க...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

தலைமையிலான தெலுங்கு தேசம், கருணாநிதி தலைமையிலான தி.மு.க. மற்றும் இடதுசாரிக் கட்சிகள் இணைந்து முன்னர் பலமிக்க தேசிய முன்னணி என்ற அமைப்பை உருவாக்கி —

மத்திய ஆட்சியைக் கைப்பற்றியது தெரிந்ததே.

தேசிய முன்னணி ஆட்சி கவிழ்ந்த பின்னர் குறுகிய காலம் ஆட்சிக்கு வந்த பிரதமர் சந்திரசேகர் தலைமையிலான அரசு தமிழகத்தில் தி. மு. க. ஆட்சியைக் கலைத்தது—

காலப்போக்கில் முன்னாள் பிரதமர் சந்திரசேகரின் சமாஜவாதி ஜனதா தளத்துடன், தேசிய முன்னணி இணைந்து செயற்பட விரும்பிய போது—

தேசிய முன்னணியிலிருந்து தமது கட்சி விலகப் போவதாக தி. மு. க. தலைவர் கருணாநிதி அறிவித்ததும் தெரிந்ததே.

அண்மையில் நடந்த சட்டசபைத் தேர்தலில் ஜனதா தளம் கர்நாடக மாநிலத்தையும், தெலுங்கு தேசம் ஆந்திரா மாநிலத்தையும் கைப்பற்றியுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது.

ஒவ்வொரு மாநிலங்களிலும் பலம் பெற்றிருக்கும் கட்சிகள் ஒன்று சேர்ந்து புதிய எதிரணிக் கூட்டணி ஒன்றை உருவாக்கி பங்கீட்டு அடிப்படையில் தொகுதிகளைப் பகிர்ந்து தேர்தலில் போட்டியிடுமானால், அது நரசிம்மராவின் காங்கிரஸை வீழ்த்தி, ஆட்சியை எதிரணியின் கைகளுக்குக் கிடைக்கச் செய்யும் எனி அவதானிகள் கருத்து வெளியிட்டனர். [ஒ-8[

ஆசிரிய

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

களது துறைசார் அனுபவத்தைக் பெருக்கவும் வகைசெய்யும் விதத்தில் அவர்களுக்கு ஊக்கமளிக்கப்பட வேண்டும் என்றும் குழு சிபார்சு செய்துள்ளது. (அ)

பேராளர் என்ற...

(1 ஆம் பக்கத் தொடர்ச்சி)

முடியாதவாறு தடுக்கப்பட்டுள்ளனர்.

மாநாட்டுக்கு வருவோர் விபரம் தனியாகப் பதியப்படுகிறது. அதில் தஞ்சையில் தங்குமிடம், தங்கும் நாட்கள் பற்றிய விவரமும் சேர்க்கப்பட்டுள்ளது.

உலக தமிழாராய்ச்சி மாநாடு ஒரு தனிக் கட்சியின் விழாவாக திட்டமிட்டு செயல்படுத்தப்பட்டு வருகிறது. எனவே இந்த மாநாட்டைப் பெரும்பாலான தமிழகக் கட்சிகள் பகிஷ்கரிக்கும் எனத் தெரியவருகிறது.— இவ்வாறு அந்தப் பத்திரிகைச் செய்தி தெரிவித்தது. (உ-3)

இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம்
கோப்பாய் பிரிவு
பிற்போடப்பட்டுள்ளது

31 — 12 - 1994 இல் அதிர்ஷ்டம் பார்க்கப்பட விருந்த அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பு தவிர்க்கமுடியாத காரணத்தினால் 05—03—1995 அன்று அதிர்ஷ்டம் பார்க்கப்படும் என்பதை அறியத்தருகிறோம்.

இ. மயில்வாகனம்
கௌரவ செயலாளர்

(சி/10117)

மரண அறிவித்தல்கள்

அம்பலவாணர் கந்தையா
(ஆசிரியரும், முன்னாள் நவாலி மகேஸ்வர இல்ல பொறுப்பாளரும்)

வட்டு தெற்கு மாவடியைச் சேர்ந்த அம்பலவாணர் கந்தையா நேற்று 28 - 12 - 94 காலமானார்.

அன்னார் இரத்தினம்மாளின் அன்புக் கணவரும், முருகானந்தன் (கனடா), நாகேஸ்வரி (டென்மார்க்) ஆகியோரின் அன்புத் தகப்பனாரும், ஜெகதா, சாந்த லோஜன் ஆகியோரின் மாமனாரும், ஆதவன், அர்ச்சுனா, கார்த்திகா ஆகியோரின் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (29 - 12 - 94) வியாழன் நண்பகல் 12 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் வழுக்கையாறு மயானத்திற்கு தகனக்கிரியைகளுக்காக எடுத்துச் செல்லப்படும்.

இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
க. இரத்தினம்மாள்
(பனைவி)

வட்டு தெற்கு,
மாவடிச்சந்தி,
வட்டுக்கோட்டை. (34421)

திருமதி பரமேஸ்வரி அம்மா மீனாட்சிசுந்தரேஸ்வரக் குருக்கள்

திருமதி பரமேஸ்வரி அம்மா மீனாட்சிசுந்தரேஸ்வரக் குருக்கள் நேற்று முன்தினம் காலமானார்.

அன்னார் புங்குடுதீவு கிராஞ்சியம்பதி மீனாட்சிசுந்தரேஸ்வரக் குருக்களின் அன்பு மனைவியும், திருமதி லோகேஸ்வரி நாகேந்திரக் குருக்களின் அன்புத் தாயாரும், புங்குடுதீவு வெஞ்ஞ் சிறீநி நாகேந்திரக் குருக்களின் (சின்னமணி ஐயா) அன்பு மாமியாரும், அருணோதயசர்மா, கர்சினி ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

இறுதிக் கிரியைகள் இன்று (29 - 12 - 94) நண்பகலளவில் நடைபெறும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்;
சிவஸ்ரீ நாகேந்திரக் குருக்கள்

138, கிராம விஸ்தரிப்புத் திட்டம்,
திருநெல்வேலி. (சி/10118)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை நியூ உதயன் (பிறைவேற்) லிமிற்டெட்டினால் யாழ்ப்பாணம் நாவலர் வீதி, 292/2, இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 29—12—1994 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.